மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

லர் 3 | 1 - 12 - 54 | இதழ் 15



அறிவியல் அறிஞர்

லூயி பாஸ்டர்

மறுமுயற்சி - ஆனால் வெற்றி !

1942-ல் சர் கே. வி. ரெட்டி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த காலத்தில், அறிஞர் அண்ணா அவர்களை வரவழைக்க முயற்சி எடுத்து, அந்த முயற்சி தோல்வியுறவே, திராவிட இயக்க மாணவர்கள் வேறொரு வாய்ப்பை எதிர்பார்த்திருந்தனர்.

சர் கே. வி. ரெட்டி இயற்கை எய்திய பிறகு தோழர் எம். இரெத்தினசாமி அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக வந்தார். அப்பொழுது தமிழ்த் துறைப் பேராசிரியராகத் தோழர் கா. சு. பிள்ளை அவர்கள் இருந்தார்கள். தோழர் க. அன்பழகன் தமிழ் இலக்கியக் கழகத்தின் செயலாளராக இருந்தார். திராவிட இயக்க மாணவர்களின் ஒத்துழைப்பின்பேரில் தோழர் க. அன்பழகன் அவர்கள் விடா முயற்சிசெய்து அறிஞர் அண்ணா அவர்களை வரவழைப்பதற்கான அனுமதியைத் துணைவேந்தரிடம் பெற்றார். அறிஞர் அண்ணா அவர்களின் வருகை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மட்டுமல்லாமல், மாணவ உலகிடையே புதியதொரு வரலாற்றை ஏற்படுத்துவதாகவும், மாணவ இயக்க வளர்ச்சிக்கு ஊட்டம் ஊட்டுவதாகவும் இருந்தது.

தமிழ்ப் பேரவை, தமிழ் இலக்கியக் கழகம் ஆகிய இரண்டின் சார்பாகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திற்குப் பேராசிரியர் கா. சு. பிள்ளை அவர்கள் தலைமை தாங்கி அறிஞர் அண்ணாவைப் பற்றி அரிய பாராட்டுரை ஒன்று வழங்கினார். மாணவ உள்ளங்களெல்லாம் அடைய முடியாத வொன்றை அடைந்துவிட்டவைபோல் பெருமித உணர்ச்சியோடு களிகொள்ள, அறிஞர் அண்ணா அவர்கள் "ஆற்றோரம்" என்னும் பொருள்பற்றி அழகுபட, ஆர்வம்மிக, நகைமிளிர, நயம் சிறக்க, சொல் இனிக்க, பொருள் பொதிய அருவியின் வீழ்ச்சியென அரிய சொற்பொழிவு ஆற்றினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் தமிழ்ப் பேச்சின் அருமையைக் கேட்டறிந்த செவிகள், அதைவிட மேலாக விளங்கிய அவரது ஆங்கிலப் பேச்சின் அருமையையும் கேட்டறியும் வாய்ப்பினையும் பெற்றன. துணைவேந்தர் தோழர் எம். இரெத்தினசாமி அவர்கள் தலைமையில் "பழைய உலகமும் புதிய உலகமும்" (The World old and new) என்னும் பொருள்பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினார்கள். இந்த இரண்டு பேச்சும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அப்பொழுது படித்துக்கொண்டிருந்த செயல்மாணவர்கள் சிலர்க்கு, அறிஞர் அண்ணாவைச் சிறந்த எடுத்துக்காட்டாகவும், வழிகாட்டியாகவும் கொள்ளும்படி ஊக்கமளித்தன என்றால் அது மிகையாகாது.

அந்தத் தடவை அண்ணா அவர்கள் விருந்தினர் விடுதியில் இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து தங்கினார்கள். அப்பொழுதுதான் தேனடையை மொய்க்கும் தேனீக்கள் போல் அறிஞர் அண்ணாவைச் சூழ்ந்துகொண்டு மாணவர்கள் கேள்விமேல் கேள்வி கேட்டதும், அண்ணா அவர்கள் விடையிறுத்ததும், மாணவர்களை மாணவ நிலைக்குப் பிறகு பொதுப்பணிக்கு அழைத்ததும், மாணவர்கள் இசைந்ததும் ஆகும்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

1 - 12 - 54 புதன்கிழமை

ஜனநாயகம் தேய்கிறது!

சென்னையின் தெருக்களிலும், தெரு மூலைகளிலும், பொதுச்சாலைகளிலும் இனிப்பொதுக் கூட்டங்கள் நடைபெறக்கூடாது என்றும், பொதுக்கூட்டங்கள் நடைபெறுவதற்கான அனுமதி இனி வழங்கப்படமாட்டாது என்றும் சென்னை அரசியலார் கட்டளை ஒன்று அண்மையில் பிறப்பித்துள்ளார்கள்.

அவ்விடங்களில் பொதுக்கூட்டம் கூடுவது போக்குவரத்துக்குப் பெருந் தடையாக இருக்கிறது என்பதும், பொதுக்கூட்டத்தில் ஒலி பெருக்கி வைப்பது அக்கம்பக்கத்திலுள்ளவர்களுக்குப் பெருங் காதுக்குடைச்சலாக இருக்கிறது என்பதும், வீண் சண்டை சச்சரவு குழப்பங்களுக்கு அரசியல் பொதுக்கூட்டங்கள் காரணமாகிப் பொது அமைதியைக் கெடுப்பனவாக இருக்கின்றன என்பதும் புதிய கட்டளை பிறப்பிப்பதற்கான காரணங்களாகச் சொல்லப்பட்டுள்ளன.

தெருக்களில் பொதுக்கூட்டங்கள் கூட்டக் கூடாது என்பதற்கான காரணங்களை முன் வைக்க முனைந்துள்ள அரசாங்கம், பொதுக் கூட்டம் கூடுவதற்கான வேறு பொது இடங்களைச் செம்மையான முறையில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதா என்றால், அதுதான் இல்லை! இன்றைய சென்னை அரசாங்கம் ஜனநாயக உரிமையைப் பறிக்கத் தெரிந்திருக்கிறதேயல்லாமல், ஜனநாயக உரிமையைப் போற்றி வளர்த்துக் காப்பாற்றிக் கொடுக்கும் வகையை ஏனோ அடிக்கடி மறந்துவிடுகிறது!

இன்று மத்தியிலும் சரி மாநிலத்திலும்சரி ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாகக் கூறப்படுகிறது; மக்களுக்கு ஜனநாயக வாழ்வு அளிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு ஜனநாயக ஆட்சி நல்ல முறையில் நடைபெற, பொதுமக்களின் கருத்து பெரும்பான்மை வகையில் உருவாக்கப்பட வேண்டியது மிகமிக இன்றியமையாததாகும். பொது மக்களின் கருத்து உருவாக்கப்படவேண்டுமானால், பொதுமக்களின் முன்னால் பல்வேறு பிரச்சினைகளையும் பற்றிய பல்வேறுபட்ட கருத்துக்களும் பரிமாறப்படவேண்டும். பொது மக்கள் பல்வேறுபட்ட கருத்துக்களையும் கேட்டறிய அடிக்கடி பொதுக்கூட்டமாகக் கூட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பொது மக்கள் அடிக்கடி கூடவேண்டியது இன்றியமையாததாக ஆகும்போது, அவர்கள் கூடுவதற்கான பரந்த வெளிகள் இருக்க வேண்டியதும் இன்றியமையாததாகிறது. ஒரு ஜனநாயக ஆட்சிக்கு மிகமிக இன்றியமையாதனவாகவும், அடிப்படையானவையாகவும், ஜனநாயகக் கருத்தை உருவாக்கும் நிலைக்களன்களாகவும் விளங்கக்கூடிய பொது மக்கள் கூடும் பொதுக்கூட்ட இடங்களைச் சென்னை அரசு புறக்கணிக்கிறது அல்லது அழிக்கிறது அல்லது ஏற்படுத்த மறுக்கிறது என்றால், அதன் போக்கை எந்த நாகரிக அரசியல் இயக்கத்தார்தான் கண்டிக்காமலிருக்கமுடியும்.

ஜனநாயக ஆட்சியைக்கொண்ட ஒரு நாட்டிற்குப் பள்ளிக்கூடங்களும் பயிற்சிச்சாலைகளும், கல்லூரிகளும் கலைக்கழகங்களும், விளையாட்டு மைதானங்களும் வேடிக்கை வெளிகளும், கண்காட்சிச்சாலைகளும் கவின்கலைக் கூடங்களும், நாடகக் கொட்டகைகளும் நடனசாலைகளும், படக்காட்சி மண்டபங்களும் பூஞ்செடித் தோட்டங்களும் எவ்வளவு இன்றியமையாதனவாகக் கொள்ளப்படுகின்றனவோ, அவற்றை விட இன்றியமையாதனவாகக் கொள்ளப்படவேண்டியவை **பொதுக்கூட்டத் திடல்களாகும்.** சென்னையில் அரசியல் கட்சிக் காரர்கள் தெருக்களிலும், தெருமுனைகளிலும், பொதுச்சாலைகளிலும் கூட்டங்கள் கூட்டுகிறார்கள் என்றால், ஏன் கூட்டுகிறார்கள்? விருப்பத்தோடா கூட்டுகிறார்கள்? இல்லையே! வேறு வழி—வசதி—வகை ஏதுமில்லை! எனவேதான் கூட்டுகிறார்கள். அரசியல் கட்சிக் கூட்டங்கள் தெருக்களில் கூடவேண்டிய நிலைமை சென்னையிலிருக்கிறது என்றால், அதற்காக வெட்கப்படவேண்டியவர்கள் யார்? சென்னை அரசியலார் அல்லவா! சென்னையிலுள்ள ஒவ்வொரு வட்டத்தாரும் பொதுக்கூட்டமாகக் கூட விரும்பினால், கூடுவதற்கு என்ன வசதியைச் செய்துதந்திருக்கிறது? செய்து தரவேண்டியது நாணயமும் நேர்மையும் கொண்ட ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் கடமையல்லவா? பொதுக்கூட்டம் கூடுவதற்கான வசதியை வட்டந்தோறும் செய்துதந்துவிட்டுப், பிறகு

தெருக்களில் கூட்டங் கூட்டக்கூடாது என்ற கட்டளையைச் சென்னை அரசாங்கம் பிறப்பிக்க முன்வந்திருக்குமேயானால் அதன் போக்கில் நாணயமும் நேர்மையும் கலந்திருப்பதாக நாம் ஒப்புக்கொள்ள முடியும்.

ஏறத்தாழப் பதினைந்து இலட்சம் மக்கள் வாழும் சென்னையில், பொதுமக்கள் பொதுக் கூட்டமாகக் கூடுவதற்கு எந்த ஒரு வசதியைச் சென்னை அரசாங்கம் செய்துதந்திருக்கிறது? அரசாங்கத்துக்குச் சொந்தமான ஜிம்கானா கிரவுண்ட், ஐலண்டுகிரவுண்ட், கோட்டை வெளிகள், கவர்ன்மெண்ட் ஹவுஸிலுள்ள பரந்த வெளிகள், போர்ப்படைகளுக்குச் சொந்தமான வெளிகள் போன்றவற்றில் பொதுக் கூட்டங்கள் நடைபெறக்கூடாது என்று அரசாங்கம் ஏற்கனவே கட்டளையிட்டுவிட்டது. அரசாங்கத்துக்குச் சொந்தமானவையும், அரசாங்கத்தின் உதவி பெறுபவையுமான பள்ளிகள்—கல்லூரிகள்—பல்கலைக்கழகங்கள்—பணிமனைகள் ஆகியவைகளைச் சுற்றியுள்ள விளையாட்டு வெளிகளிலும் பொதுக்கூட்டங்கள் கூட்டக்கூடாது என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. சென்னையில் நகரசபைக்குச் சொந்தமாக ஆங்காங்கு வரண்டுகிடக்கும் பூங்காக்களிலும், பீபிள்ஸ் பார்க்கின் பரந்த வெளிகளிலும், பீபிள்ஸ்பார்க்கிலுள்ள ஸ்டேடியத்திலும், நகரசபைப்பள்ளிக்கூட விளையாட்டு மைதானங்களிலும் பொதுக்கூட்டங்கள் கூடட்டக்கூடாது என்று நகரசபை கட்டளை விதித்துள்ளது. இவைகளையெல்லாம் தள்ளிப் பார்த்தால், போயும்போயும் கடற்கரை ஒன்றுதான் கூட்டம் கூடுவதற்கான ஏதுவுடையதாக இருக்கிறது. அங்கும் இயற்கை செய்து தந்துள்ள வசதியைத் தவிர, அரசாங்கம் செய்து தந்துள்ளது ஒன்றுமில்லை! சென்னையில் நடைபெறுகிற பொதுக்கூட்டங்களெல்லாம் கடற்கரையில்தான் நடைபெறவேண்டும், அவையும் பெருந்தொல்லைகளுக்கிடையே மிகுதியான பொருட்செலவின்பேரில்தான் நடைபெறவேண்டும் என்றால் அது இயலக்கூடிய செயலா என்பதை நேர்மையாளர்கள் சிந்திக்க வேண்டும். இந்த நிலைமையில் அரசியல் இயக்கத்தவர்கள் தெருமுனைகளைத் தேடுவதைத் தவிர வேறு எங்கு போவது? அங்கிருந்தும் அரசியல் கட்சியார்களை அரசாங்கம் துரத்தியடிக்கிறது, ஆனால் அவர்களுக்கு வேறு வழி ஏதும் செய்துகொடுப்பதில்லை என்றால், அது எவ்வாறு நியாயமான செயலாகும்? சென்னை அரசாங்கமும், சென்னை நகரசபையும் சேர்ந்து வட்டந்தோறும் பொதுக்கூட்டமைதானங்களை ஏற்படுத்துகிறவரையில், பரந்த தெருமுனைகளைப் பொதுக்கூட்டத்திற்கு ஒதுக்கித்தருவதுதான் அரசாங்கத்தின் நீதியும் கடமையுமாகும்! இல்லையாயின் நகரிலுள்ள பூங்காக்களையும், ஐலண்டு கிரவுண்ட், ஜிம்கானா கிரவுண்ட் போன்ற பரந்த வெளிகளையும் பொதுக் கூட்டங்கள் கூட்டுவதற்கான இடங்களாகக் கொள்ள அரசாங்கம் அனுமதியளிக்க முன்வரவேண்டும்! இத்தகைய இன்றியமையாத வசதிகளைச் செய்துதர அரசாங்கம் பின்வாங்குமேயானால் பொது நீதியையும், கடமையையும் வற்புறுத்த, எல்லா அரசியல் கட்சிகளும் ஒரு மனப்பான்மையோடு ஒன்று சேர்ந்து பாடுபட முன்வரவேண்டும். அரசியல் கட்சித்தலைவர்கள் ஆவன செய்ய முன்வருவார்களாக!

மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணி வரையில் பொதுக்கூட்டங்களில் வைக்கப்படும் ஒலி பெருக்கிகள் காதைக் குடைகின்றன என்பது உண்மையான காரணமாக இருக்குமேயானால், இரவு 10 மணிக்குமேல் நள்ளிரவு வரையிலும், சில நேரங்களில் விடியவிடிய வரையிலும், கதா காலட்சேபக் கூட்டங்களிலும், கலியாண வீடுகளிலும் வீதிதோறும் வைக்கப்படும் ஒலி பெருக்கிகள் காதைக் குடையாமலிருக்கின்றனவா என்று கேட்கிறோம்? மாலைக் கூட்டங்களைவிட நள்ளிரவுக் கூட்டங்கள் மிகக் கொடுமையானவைகளாக அல்லவா இருக்கவேண்டும்? ஒலிபெருக்கியோடு நள்ளிரவுக் கூட்டங்களை அனுமதிக்கிற அரசாங்கம், மாலைக் கூட்டங்களை அனுமதிக்க மறுப்பானேன்? காரணம், அரசியலார் கரத்தில் **ஜனநாயகம் தேய்கிறது!** தேய்வை நீக்க திறமையாளர்கள் முன்வருவார்களாக!

விஷின்ஸ்கி மறைவு

ஐக்கியநாடுகள் அவையில் சோவியத் ரஷ்யாவின் தூதுவராகப் பல ஆண்டுகள் இருந்து, மிகத் திறமையாக அறிவாற்றல்களோடு பணிபுரிந்து, யாவரும் வியக்கத்தக்க வண்ணம் சிறந்து விளங்கிய அரசியல் பேரறிஞரான விஷின்ஸ்கி, திடீரென்று மாரடைப்பால் இயற்கை எய்திய செய்தி மிக்க துயரத்தையும் துக்கத்தையும் தருவதாகும். அவர் மறைவு ரஷ்யாவுக்குப் பெரும் இழப்பாகும். அவர் பெயரும் புகழும் என்றும் வாழ்வனவாக!

கருத்துக் கதிர்

பிரிவினைக் கீதம் ஓங்குகிறது

" பக்தூனிஸ்தான் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டாலன்றி ஆப்கனிஸ்தானுக்கும் பாக்கிஸ்தானுக்கு மிடையே நட்பு உறவு ஏற்படுமென்ற நம்பிக்கைக்கு இடமில்லை " என்று பாக்கிஸ்தான் அரசாங்கத்திடம், அண்மையில் கராச்சி சென்றிருந்த ஆப்கானிய அந்நிய மந்திரி சர்தார் மகமத் நயிராம்கான் தெரிவித்து விட்டதாக, அவர் வெளியிட்ட அறிக்கை யொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமல்லாமல், " அசாத் பக்தூனிஸ்தானிலுள்ள பகுதி யாவும் பாக்கிஸ்தானுடன் சேரவோ, அதில் ஒரு பகுதியாக இணையவோ போவதில்லை. பக்தூனியர்கள் வாழும் பகுதி எப்பொழுதுமே யாராலும் ஆளப்பட்டதில்லை. வரலாற்றுப்படியே அது இனியும் இயங்கும் " என்றவாறு பக்தூன்ஜிர்கா இந்து ஸ்தாபன பொதுச் செயலாளர் பம்பாய்க் கூட்டம் ஒன்றில் கூறியுள்ளார்

இவைகளை இந்தியாவில் வாழும் பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டு, அந்தக் கருத்தை முழுக்க முழுக்க ஆதரிப்பன போல காட்டிக்கொள்வதோடு மட்டுமல்லாமல், சில சமயங்களில் அந்தக் கருத்தைத் தழுவி எழுதவும் முனைகின்றன. ஆனால் அந்தப் பத்திரிகைகளெல்லாம், திராவிடநாடு பிரிவினையைக் கூறும்போது மட்டும் வாயடைத்துப் போவதோடு, மறைமுகமாக எதிர்க்கவும் தலைப்பட்டுவிடுகின்றன. பக்தூனிஸ்தான் தனியே பிரிந்து வாழ்வதற்கு எவ்வளவு காரணங்கள் உண்டோ, அவற்றைவிட ஆயிரக்கணக்கான காரணங்கள் திராவிட நாடு தனியே பிரிய வேண்டுமென்பதற்கு இருப்பதை ஏனோ அந்தப் பத்திரிகைகள் காண மறுக்கின்றன? காலப்போக்குதான் அவைகளைத் தெளிய வைக்கும்போலும்!

○ ○ ○

ஈச்சமரத்தாழ்வார்!

நரசிங்கராஜபுரம் அக்ராஹாரம் என்ற சிற்றூரில் ஈச்சமரத்தாழ்வார் ஒருவர் இப்பொழுது தோன்றியுள்ளார்! அவ்வூர் கோயிலின் அருகே இதுவரையில் மரமாக நின்ற ஈச்சமரம் இப்பொழுது ஆழ்வாராக அவதாரம் எடுத்திருக்கிறதாம்! அந்த ஈச்சமரத்தாழ்வார் காலை 4 மணிக்கு வளைய ஆரம்பித்து மாலை 3-30 மணிக்கு மிகத் தாழ்வாக வளைகிறாராம்; பிறகு 4 மணிக்கு மீண்டும் நிமிர ஆரம்பித்து நேர் நிலையை அடைகிறாராம்! இரவு 12 மணியிலிருந்து 1 மணி வரையில் அந்த ஆழ்வார் நறுமணத்தை வீசிக்கொண்டிருக்கிறாராம்! இந்த ஆழ்வாருக்கு மக்கள் பழங்கள் படைத்துச், சூடம்கொளுத்தி வணங்கி வருகிறார்களாம்! இன்னும் எத்தனை நாளைக்கு இந்த ஆழ்வார் காட்சியளிப்பாரோ தெரியவில்லை!

முன்பு ஒருமுறை இப்படித்தான் சென்னை கச்சாலீசுவரர் கோயிலில் சேவல் நாயனார் ஒருவர் தோன்றினார்! ஒரு வாரத்திற்குப் பிறகு அந்த நாயனாரைப் பற்றிச் செய்தி ஒன்றும் வெளிவரவில்லை. யார் வயிற்றுக்குள் பிரியாணியாகப் போனாரோ தெரியவில்லை!

வடநாட்டுக் கோயில் ஒன்றில் சூலத்தாழ்வார் ஒருவர் சிலநாட்கள் ஓயாமல் ஆடிக்கொண்டே இருந்தார்! ஏராளமான பக்தர்கள் சென்றார்கள்! அவர் சிலநாட்களுக்குப் பிறகு என்ன ஆயினார் என்று தெரியவில்லை! ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றுவதும் மறைவதும் இந்நாட்டின் இயல்பல்லவோ!

குறிப்பிட்டவகை ஈச்சமரம் குறிப்பிட்ட தட்ப வெப்ப நிலையில் வளைந்து நிமிர்வது அதிசயிக்கத்தக்கதல்லவென்றும், அது இயற்கைதான் என்றும் காலஞ்சென்ற மரநூல் அறிவியல் அறிஞர் சர் ஜகதீஸ்சந்திர போஸ் 1929-ல் கண்டறிந்து கூறியிருக்கிறார் என்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டி. சி. என். சிங் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். சர். ஜ. ச. போஸ் எழுதியுள்ள "செடிகளின் வளர்ச்சியும் வெப்ப அசைவுகளும்" (Growth and Tropic Movements of Plants) என்ற நூலில் இதற்கான விளக்கம் காணலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

○ ○ ○

பணம் பாழாகும் படலம்

இந்திய அரசாங்கத்தினர் கதரையே வாங்கும்படி எல்லா இலாகாவினரையும் வற்புறுத்துகின்றனர். ஆலைத் துணிக்குப் பதிலாகக் கதரைவாங்குவதால், தபால் இலாகாவுக்கு 31·7 இலட்சரூபாய் அதிகப்படியாகவும், இரயில்வே இலாகாவுக்கு ரூ. 1 கோடி அதிகப்படியாகவும் செலவு ஆகின்றதாம். இதே கணக்குதான் எல்லா இலாகாக்களுக்கும்!

அட்டைப்படம் :

லூயி பாஸ்டர்

லூயி பாஸ்டர்! எத்தனையோ கோடிக்கணக்கான மக்களின் உள்ளத்தில் மகிழ்ச்சி விளக்கு எரிய முக்கிய காரணமாக இருந்த பெருந்தகையாளர்களில் தலைசிறந்த ஒரு பெரும் அறிவியல் அறிஞர்! மனித சமுதாயம் அவரை என்றென்றும் ஏத்தி ஏத்திப் போற்றிப் புகழ்ந்து, அவருக்கு நன்றி செலுத்தக்கடமைப் பட்டிருக்கிறது! மனித சமுதாயத்திற்கு அவர் செய்த நன்மை அந்த அளவுக்கு அளப்பரியது!

ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு வகைக் கிருமிகள்தாம் மூலகாரணம் என்றும், அந்தக் கிருமிகள் ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவுகின்றன என்றும் கண்டுபிடித்து, அதனை உறுதிப்படுத்தி, உலகுக்கு முதன் முதல் விளக்கிக்காட்டிய அறிவியல் அறிஞர் லூயி பாஸ்டரே யாவார்.

குறிப்பாக பிரான்ஸ் நாட்டிலும், பொதுவாக ஐரோப்பிய நாடுகளிலும் பட்டுப்பூச்சிகள் நோய்வாய்ப்பட்டு ஏராளமாக மடிய, அதன் காரணமாகப் பட்டு உற்பத்தியாளரும்—தொழிலாளர்களும் — நெசவாளர்களும் — வணிகர்களும் வாழ்வற்று வாடி வதங்க, அவர்களின் கண்ணீரைத் துடைக்க லூயி பாஸ்டர் முயன்றார்; பட்டுப்பூச்சிகள் அழிவதற்கு நோய்க் கிருமிகள் காரணம் என்பதைக் கண்டுபிடித்தார்; நோய்க் கிருமிகளைக் கொல்லும் வகையினைக் கண்டுபிடித்தார்; பட்டுப்பூச்சிகளைக் காப்பாற்றினர்; பட்டுப்பூச்சிகள் காப்பாற்றப்படவே அவற்றை நம்பி வாழ்வு நடத்தியோர் அத்தனைப்பேரும் காப்பாற்றப்பட்டனர். அதைப் போலவே கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு இறந்துபட்டகாலை, அதற்குக் காரணம் நோய்க் கிருமிகள்தாம் என்பதைக் கண்டு அவற்றிற்கான நோய்த்தடுப்பு மருந்துகளைக் கண்டு பிடித்து, அவற்றை ஊசியின்மூலம் கால்நடைகளின் உடலிற் செலுத்தி, கால்நடைகளைக் காப்பாற்றி, மக்களின் உள்ளத்தில் மகிழ்ச்சியைப் பொங்கவைத்தார்.

மக்களுக்கு நோய்கள் ஏற்படுவதற்கும் நோய்க்கிருமிகள்தாம் காரணம் என்பதைக் கண்டுபிடித்தார். கொப்பளங்களிலிருந்து வடியும் சீழ், சிரங்குகள், இறந்துபோகும் நிலையிலுள்ளவர்களின் இரத்தம் ஆகியவற்றைப் பூதக்கண்ணாடியின் கீழ் வைத்து ஆராய்ந்து பார்த்து, அந்தந்த நோய்க்கான நோய்க்கிருமிகளைக் கண்டுபிடித்தார்; அவற்றைக் கொல்லுவதற்கான மருந்துகளையும் கண்டுபிடித்தார்.

பாஸ்டர் காலத்திற்கு முன்னால் வெறிநாய், ஓநாய் முதலியவைகளால் கடிபட்டவர்கள் இறந்தொழிவதைத்தவிர மீட்சிபெறும் வழி காணாதவர்களாகவே யிருந்தனர். வெறிநாய்-ஓநாய்களால் கடிபட்டவர்களின் உடலில் தடுப்பு ஊசி மருந்து செலுத்தி அவர்களையெல்லாம் காப்பாற்றியபெருமை பாஸ்டருக்கே உரித்தாகும். மனித சமுதாயத்திற்கு அவர் புரிந்த நன்மைகள் ஒன்று இரண்டல்ல பலப் பல.

லூயி பாஸ்டர் பிரான்ஸ் நாட்டில் ஆர்பாய் என்ற சிற்றூரில் 1822-ம் ஆண்டில் பிறந்தார். அவர் தந்தை நெப்போலியன் போர்ப்படையில் போர்வீரராகப் பணியாற்றி, நெப்போலியன் காலத்திற்குப் பின் தோல் பதனிடும் தொழிலில் இறங்கியவர்.

பாஸ்டர் சிறு வயதிலேயே பள்ளி, கல்லூரிப் படிப்புகளை முடித்துக்கொண்டு ஆராய்ச்சித் துறையில் இறங்கினார். அப்பொழுது சிறந்த அறிவியல் அறிஞர்களாக விளங்கிய டூமாஸ், பாலாட், பையாட் என்பவர்கள் பாஸ்டருக்குப் பலவழிகளிலும் ஊக்கம் அளித்தனர். பாஸ்டர் பல கல்லூரிகளிலும், ஆய்வுச்சாலைகளிலும் இருந்து ஆராய்ச்சிகள் நடத்தினார், பல்வேறு நோய்க்கிருமிகளைத் தடுப்பதற்கான பல்வேறு மருந்துவகைகளைக் கண்டுபிடித்தார். பல வகையான அறிவியல் பட்டங்கள் பல்வேறு நாட்டு அரசர்களாலும் பல்வேறு பல்கலைக் கழகங்களாலும் அவருக்கு அளிக்கப்பட்டன. மக்களின் புகழுரைக்கும், பாராட்டுதலுக்கும் காரணமானார்.

பாஸ்டர் மிக எளிய இனிய வாழ்வை நடத்தி வந்தார். இடைக்காலத்தில் அவர் வாதத்தால் முடக்கப்பட்டு ஒரு கையின் உதவியையும் ஒரு காலின் உதவியையும் இழந்தார். என்றாலும் ஆராய்ச்சிகளை அரும்பாடுபட்டு செய்து கொண்டேயிருந்தார். பாஸ்டர் மிகவும் முயன்று ஆய்வுச்சாலை ஒன்றும், சிகிச்சை இடம் ஒன்றும் பெருஞ்செலவில் கட்டி முடித்தார். நாற்பதாண்டு இடையறாத உழைப்புக்குப்பின் 1895-ம் ஆண்டில் தமது எழுபத்து மூன்றாவது ஆண்டில் பாஸ்டர் கண்களை மூடினார்; உலகம் கண்ணீரைப் பெருக்கிற்று! ஆனால் அவர் மக்கள் உள்ளத்தில் ஏற்றி விட்ட மகிழ்ச்சி விளக்கு எரிந்துகொண்டிருக்கிறது!

காதலும் கடமையும்

[எழினி]

களவொழுக்கம் நீடித்துக்கொண்டிக்கிறது. தலைவனும் தலைவியும் உற்றார் உறவினர் ஊரார் யாரும் அறியாவண்ணம், பகலிரவுக் குறியிடங்களில், ஒருவரை யொருவர் எதிர்ப்படுகின்றனர். தலைவியைக் குறியிடங்களில் கண்டு பேசி மகிழ்ந்திருப்பதே பேருவகைதரும் இன்பமாகத் தலைவனுக்குப் படுகிறது. களவொழுக்கத்தை எவ்வளவு காலம் நீட்டிக்கொண்டிருக்க முடியுமோ, அவ்வளவு காலம் வரையில் நீட்டிக் களவின்பத்தைப் பெறவேண்டும் என்பதிலே தலைவன் கண்ணுங் கருத்துமாக இருக்கிறான். எனவே அவன் திருமணத்திற்கான ஏற்பாடுகள் ஏதும் செய்யாமல், திருமணநாளை ஒத்திப்போட்டுக்கொண்டே யிருக்கிறான்.

களவொழுக்கம் நீடிக்க நீடிக்க தலைவனுக்கோ மகிழ்ச்சி பெருகிறது; ஆனால் தலைவிக்கும் தோழிக்கும் அச்சந்தான் மிகுகிறது. தான் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருப்பதைத் தாய்தந்தையர் தனயர் அறிந்தால் எப்படியெல்லாம் சீறியெழுந்து சினங்கொள்வார்களோ என்ற அச்சமும், உற்றார் உறவினர் ஊரார் தெரிந்தால் எப்படியெல்லாம் கேலி செய்வார்களோ என்ற அச்சமும் தலைவியின் உள்ளத்தைக் குடைகின்றன. ஆனால் தலைவனைக் காணும்போது, விரைவில் திருமணம் செய்துகொள்ளும்படியாக அவனிடம் வற்புறுத்திச் சொல்ல அவளது நாணம் இடந்தருவதில்லை. விரைவில் திருமணம் நடந்தேறாமல் இருப்பது தலைவியைவிடத் தோழிக்குத்தான் மிக்க வேதனையைத் தருகிறது. ஏனெனில் களவொழுக்கம் யாருக்குந் தெரியாமலிருக்கும்படி பாதுகாத்துக்கொள்ளவேண்டிய பெரும் பொறுப்பு தோழியைச் சார்ந்ததாகும். தலைவன் தலைவி ஆகியவர்க்கிடையே தூது செல்லுவதும், அவர்களிடம் குறியிடங்கள் தெரிந்துகொள்ளுவதும், குறியிடத்திற்கு யாரும் அறியாவகையில் தலைவியைக்கொண்டு போய்ச் சேர்ப்பதும், தலைவனும் தலைவியும் குறியிடத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது யாரும் அவ்விடம் வந்துவிடாமல் பார்த்துக்கொள்வதும் ஆன பொறுப்புகளையெல்லாம் தோழி ஏற்கவேண்டியிருக்கிறது. திருமணம் நடந்தேறிவிடுமேயானால் தோழியின் சங்கடமான பொறுப்புகள் பல அகன்றுவிடுகின்றன. எனவேதான் விரைவாகத் திருமணம் நடந்தேறவேண்டுமென்பதிலே தலைவன் தலைவியைவிடத் தோழிக்கு மிக்க அக்கறை பிறக்கிறது. தலைவன் திருமணத்திற்கான முயற்சி செய்யாமலிருப்பதும், தலைவி அதற்கான வழி தேடாமலிருப்பதும் தோழிக்கு மிக்க வருத்தத்தையும் வேதனையையும் தருகின்றன.

ஒரு நாள் தலைவியும் தோழியும் குறியிடத்தில் காத்திருக்கின்றனர். தலைவியை நோக்கித் தலைவன் வருகிறான். தலைவியும் தோழியும் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதை அறிய வேண்டும் என்ற ஆவலால், சற்று மறைவாக நின்று ஒட்டுக்கேட்க தலைவன் முயலுகிறான். தலைவனின் வருகையையும், அவன் மறைவாக நிற்பதையும் தோழி அறிந்துகொள்கிறாள்; ஆனால் தலைவியோ அறிந்துகொள்ளவில்லை. இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு தன் உள்ளக்கிடக்கையைத் தலைவிக்கும், மறைமுகமாகத் தலைவனுக்கும் தெரிவித்துவிடத் தோழி விரும்புகிறாள்.

தலைவியைப் பார்த்துத் தோழி, "இப்பொழுதெல்லாம் என்னுடைய சொற்கள் உன்னுடைய காதில் விழுவதில்லை. ஏனென்றால் உன்னுடைய காரியம் முடிந்துவிட்டதல்லவா! தலைவரைக் கண்டு நீ பேசுகிற வரையில் உனக்கு நான் தேவைப்பட்டேன். அப்பொழுதெல்லாம் நான் என்ன சொன்னாலும் கேட்டுக்கொண்டிருந்தாய். இப்பொழுது எப்படிக் கேட்பாய்? நீ கேட்பாய் என்று நான் எதிர்பார்ப்பதும் மடத்தனந்தானே!" என்று கூறுகிறாள்.

அதுகேட்ட தலைவி, "என்னடி உளறிக்கொட்டுகிறாய்? நீ என்ன சொல்லி நான் கேட்காமல் போய்விட்டேன்?" என்று கேட்கிறாள்.

தோழி : "உன்னிடம் எல்வளவோ சொல்லிப் பார்த்துவிட்டேன். உன்னிடம் ஒன்றும்

சொல்லக்கூடாது என்றுதான் எண்ணுகிறேன். இருந்தாலும் மனம் கேட்கவில்லை!"

தலைவி: "என்னடி சொல்லுகிறாய்? நான் என்ன அவ்வளவு நன்றிகெட்டவளாகி விட்டேனா?"

தோழி: "நீ நன்றிகெட்டவளாகி விட்டாய் என்று நான் சொல்லவில்லையே! உனக்குத் தலைவர் வந்துவிட்டார்; அதுவே போதும், எல்லாம் முடிந்துவிட்டது என்று எண்ணிக்கொண்டிருக்கிறாய்! உனக்குக் கண்ணும் தெரிவதில்லை; காதும் கேட்பதில்லை!"

தலைவி: "நீ என்னதான் சொல்லுகிறாய்? சொல்லுவதைக் கொஞ்சம் விளங்கத்தான் சொல்லேன்!"

தோழி: "தலைவர் வந்தவுடன் உனக்குக் கண்ணு மண்ணு ஒன்றுந் தெரிவதில்லை! உடனே உன் அன்பு அருள் நன்றி எல்லாம் அவர்பால் சுரந்துவிடுகின்றன. நீதான் என்ன செய்வாய் அவர் ஒரு பெரிய சான்றோரல்லவா!"

தலைவி: "என்னடி சொல்லுகிறாய்? அப்படியானால் என்னுடைய தலைவர் அவ்வளவு நல்லவரல்லவா? அவரோடு நான் தொடர்பு கொண்டிருப்பது தவறா? நீ ஏன் இப்படியெல்லாம் இன்று வெறுத்துப் பேசுகிறாய்? விளக்கமாகச் சொல்ல மாட்டியாடீ!" என்று தழதழத்தக் குரலில் கேட்கிறாள்.

தோழி: "ஆகா! எவ்வளவு பெரிய நல்லவர் தெரியுமா? ஆன்றோர் ஒழுகிய நெறியைக் கடைப்பிடித்து ஒருசிறிதும் ஒழுகாத அளவுக்கு அவ்வளவு பெரிய சான்றோர்தான்! அவர் உள்ளத்தில் பொங்கி வழியும் அன்பும் அருளும்......ஆகா! எவ்வளவு எனறுதான் சொல்வேன்" என்று கேலி மொழியிற் கூறுகிறாள்.

தலைவி: (சற்று மனவருத்தமுற்று) "அப்படியானால் அவர் அன்பும் அருளும் சிறிதும் அற்றவர் என்றா, சொல்லுகிறாய்?" என்று கேட்கிறாள்.

தோழி: "உன்னை நாள்தோறும் வந்து காணும் அளவுக்கு அவரிடம் அன்பு இருக்கிறது! அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் உன்னைத் திருமணம் செய்துகொள்ளும் அளவுக்கு அவரிடம் இன்னமும் அருள் பிறக்கவில்லை என்று சொல்கிறேன். அவ்வளவுதான்! இத்தனை நாளும் திருமணம் செய்துகொள்ளாமலிருப்பதால் நீ படுந் துன்பம் எவ்வளவு? நான் படுந் தொல்லைகள் எவ்வளவு? அவருக்கு அருள் சிறிதேனும் இருந்தால், நாமிருவரும் இப்படி வேதனைப்பட விட்டு வைத்திருப்பாரா?"

தலைவி: "அவர் அருளும்படி செய்ய நாம் என்னடி செய்யலாம்? நான் செய்யவேண்டியது ஏதாவது இருந்தால் சொல்லு பார்க்கலாம்!"

தோழி: "நான் எவ்வளவோ தடவைகள் உனக்கு வழி சொல்லிக்கொடுத்திருக்கிறேன். நீ அதன்படி நடந்தால்தானே! அவரைக் கண்டவுடன்தான் உனக்கு ஒன்றும் புரிவதில்லையே!"

தலைவி: "அவர் திருமணத்தை ஒத்திப்போட்டுக்கொண்டு செல்வது எனக்கு மாத்திரம் மகிழ்ச்சியையா தருகிறது? இல்லையே! அவரிடம் சொல்லத்தான் எண்ணுகிறேன். ஆனால் அவரைக் கண்டவுடன் என் எண்ணமெல்லாம் குழம்பிவிடுகின்றன. இனித் துணிவாக நடந்துகொள்கிறேன். இப்பொழுது ஒரு வழியைக் கூறேன்!"

தோழி: "அவர் நாட்டில் நடப்பதுபோல நாமும் நடந்துகாட்டினால், அப்பொழுது தெரிகிறது அவர் படும்பாடு!"

தலைவி: "அவர் நாட்டில் என்னடி அப்படி நடக்கிறது?"

தோழி: "அதுபோல நாமும் நடக்கலாம் என்பதை நீ ஒத்துக்கொள்வாயானால் கூறுகிறேன்!"

தலைவி: "நீ என்ன சொல்லினாலும் அதன்படி நடக்கிறேன் என்றுதான் நான் சொல்லுகிறேனே! அங்கு என்ன நடக்கிறது என்பதைச் சொல்லு!"

தோழி: "அவர் நாடு இருக்கிறதே அதில் எங்கு பார்த்தாலும் மலைகள் சூழ்ந்திருக்கும். அந்த மலைகளைச் சுற்றி மேகங்கள் கூட்டம் கூட்டமாகத் தழுவிக்கிடக்கும். அந்த மலைகளில் வாழும் குரங்குகள் இயல்பாகவே வாளா இருப்பதில்லை. ஆண் குரங்கு பெண் குரங்கைத் தேடிக் கொண்டு ஓடிவரும். அப்பொழுது பெண் குரங்கு தன் குட்டிகளை எடுத்துக்கொண்டு மேகங்களிடையே ஒளிந்துகொள்ளும். ஆண்குரங்கோ பெண்குரங்கைக் காணாமல்

தேடி அலைந்து திகைத்து நடுங்கி நிற்கும்! அந்த ஆண்குரங்கு தவிப்பதைப்போல நாமும் தலைவரைத் தவிக்கவிட்டால், விரைவில் வழிக்கு வந்துவிடுவார்!"

தலைவி : "நாமும் ஒளிந்துகொண்டு அவரைத் தவிக்கவிடலாம் என்று நினைக்கிறாய்? ஆனால் அவர் விரைவில் மணம் புரிந்து கொண்டால்!......" என்று கனிவோடு கேட்கிறாள்.

தோழி : "மணம் புரிந்துகொண்டால் ஒரு தொல்லையும் இல்லையே! உனக்கும் தொல்லை இல்லை; எனக்கும் தொல்லை இல்லை; அவருக்கும் தொல்லை இல்லை!" என்று சிரித்துக்கொண்டே கூறுகிறாள்.

தலைவியும் தோழியும் உரையாடிக்கொண்டிருப்பதை நீண்டநேரம் மறைவாக இருந்து உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த தலைவன், தலைவி தோழி ஆகிய இருவரின் உள்ளக்கிடக்கையை அறிந்து, 'விரைவில் திருமணம் செய்துகொண்டால் இவர்கள் நம்மை ஏமாற்ற முடியாதல்லவா! நான் திருமணத்திற்கான திட்டம் வகுத்து, இவர்கள் திட்டம் நிறைவேறாதபடி இவர்களை ஏமாற்றுகிறேன் பார்!' என்று தனக்குள்ளாகவே எண்ணிக்கொள்கிறான்.

பிறகு தலைவியைக் காணுகிறான். திருமணத்திற்கு நாள் குறிக்கிறான். திருமணம் நிறைவேறுகிறது. எல்லோருடைய தொல்லைகளும் அகலுகின்றன!

ஃ ஃ ஃ

நற்றிணை 233-ம் செய்யுளின் கருத்தின் விளக்கமே மேலே தீட்டிக் காட்டப்பட்டிருக்கும் காதற் காட்சியாகும்.

கல்லாக் கடுவன் நடுங்கமுள் எயிற்று
மடமா மந்தி மாணு வன்பறழ்
கோடுயர் அடுக்கத்து ஆடுமழை ஒளிக்கும்
பெருங்கல் நாடனை அருளினை யாயின்
இனிஎன கொள்ளலை மன்னே கொன்ஒன்று
கூறுவன் வாழி தோழி முன்னுற
நாருடை நெஞ்சத்து ஈரம் பொத்தி
ஆன்றோர் செல்நெறி வாழாச்
சான்றோ னுதல்நற் கறிந்தனை தெரிமே

—நற்றிணை : 233.

[கல்லா - தன் தொழிலையன்றிப் பிறிதொன்றையும் கல்லாத; கடுவன் - ஆண்குரங்கு; எயிற்று - பல்லினையும்; மடம் - மடப்பத்தையும் உடைய; மந்தி - பெண்குரங்கு; மாணு - நன்கு வளர்ந்து மாட்சிமைப்படாத; வன்பறழ் - வலிவுடைய குட்டி; கோடுயர் - முகடுகள் உயர்ந்த; அருளினை - அவன் கருத்துப்படி அருள்செய்து ஒழுகுகின்றாய்; ஆயின் - அப்படி அருள்செய்து ஒழுகுகின்ற நிலைமையை நீ ஆராய்ந்து பார்ப்பாயானால்; என - என்னுடைய சொற்களை; கொள்ளலை - கொள்ளமாட்டாய்; கொன் ஒன்று கூறுவன் - என்றாலும் வீணானதொன்று கூறுவேன்; தோழி - தோழி என்று இங்கு குறிப்பிடுவது தலைவியை; முன் உற - முன்னே தலைவன் பல காலமும் வருதலால்; நார் உடை - அன்பு உடைய; ஈரம் - அருள்; பொத்தி - நிறைத்து; சான்றோன் - இங்குச் சான்றோன் என்றது உயர்த்திக்கூறுவதுபோல் பழித்துக்கூறும் கூற்றாகும்; நற்கறிந்தனை - நன்கு அறிந்துகொண்டவளாய்; தெரிமே - தேர்ந்துகொள்.]

ஃ ஃ ஃ

காதலன் காதலியர் திருமணம் செய்துகொள்வதற்கு முன்பே நீண்டநாட்கள் பழகித் தங்களுக்குள்ளே காதலன்பை வளர்த்துக் கொள்ளும் பண்பும், பிறகு திருமணம் செய்துகொள்ளும் பழக்கமும், இற்றைக்காலக் கருத்துக்கு ஒட்டியவாறே, பண்டைக்காலத்தில்

தமிழகத்தில் எவ்வளவு சிறந்து விளங்கின என்பதை இச்செய்யுள் அழகுபட எடுத்து விளக்குகிறது.

களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவன்—தலைவி—தோழி ஆகியோரின் மனநிலைகள் எவ்வாறு இருக்கும் என்பதை மிக நேர்த்தியாக இச்செய்யுளின்மூலம் அறிந்துகொள்ளலாம்.

தலைவனை நாடுகிற வரையில் தலைவி தோழியின் தயவை எதிர்பார்த்திருப்பதும், தலைவனோடு தொடர்பு ஏற்பட்ட பிறகு தலைவி தோழியின் தயவைச் சிறிது மறப்பதும், தோழியின் கூற்றுக்களைச் செவிகொள்ளாமல் தலைவி காதல் மயக்கத்திலே தலைவனோடு பழகுவதும், அதனைத் தோழி இடித்துரைத்துக் கூறுவதும், தலைவி தலைவன் பக்கம் பேசுவதா அல்லது தோழியின் பக்கம் பேசுவதா என்று திகைப்பதும் ஆனகாட்சிகள் மிக அருமையாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டிருப்பதை அறியலாம்.

தலைவன் நீண்ட தொலைவிலிருந்து வந்து தலைவியைக் கண்டுவிட்டுச் செல்கிறான் என்று தெரிகிறது. எனவேதான் தலைவி தலைவனின் நாட்டு வளத்தை அறியாதவளாய் இருக்கிறாள்; தோழி மூலம் அறிந்துகொள்ளவேண்டியவளாக இருக்கிறாள்.

மலையடுக்கங்களில் மேகங்கள் சூழ்வதும், குரங்குகள் தாவுவதுமான குறிப்புகள், தலைவன் நீர்வளம், மலைவளம், சோலைவளம் ஆகிய வளப்பம் பல உடைய நாட்டிற்கு உரிமையுடையவன் என்று தெரியவருகிறது. தலைவனின் உயர்வைக்கொண்டு தலைவியின் உயர்வையும் கண்டுகொள்ளலாம். அவர்களின் களவொழுக்கமும், காதலன்பும் ஒத்து உயர்ந்து சிறந்து விளங்கின என்று உணரலாம். தலைவனைத் தம் வழிக்குத் திருப்ப தோழி கையாண்ட முறை போற்றி மகிழத்தக்கதாகும். காதல் புரியும் தலைவன் கடைப்பிடிக்கவேண்டிய கடமையைத் தோழி அழகுபட உரைப்பது படித்துப் படித்து மகிழுதற்குரியதாகும்.

'மன்றம்' சந்தா விபரம்

		உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்		6—0—0	7—8—0
ஆறு திங்கள்	,,	3—0—0	
தனி இதழ்	,,	0—4—0	0—5—0

உலகம் எவ்வளவு மக்களைத் தாங்கும்?

அண்மையில் 1954-ல் கூடிய உலகை மக்கள் தொகைக் கழகத் (World Population Congress) தின் அறிக்கைப்படி இன்று உலகில் வாழும் மக்களின் எண்ணிக்கை 250 00,00.000 ஆகும். இன்று வளர்ந்துள்ள கணக்குப்படி மக்கள் தொகை வளாந்துகொண்டேபோனால் 1980-ல் உலக மக்களின் தொகை 400,00,00,000 ஆக வளர்ந்திருக்கும். நாள் ஒன்றுக்கு 85,000 குழந்தைகள் பிறக்கின்றன.

உலகிலுள்ள உணவு வளத்தின் வளர்ச்சியையும், மக்சள் வளத்தின் வளர்ச்சியையும் தொடர்பு படுத்திப் பார்த்தால், உணவு வளம், ஒரு காலத்தில், வளரும் மக்கள் வளத்தைச் சமாளிக்கமுடியாத நிலைக்கு வந்து தத்தளித்துப்போகும். மக்களின் எண்ணிக்கை பெருகப் பெருக உணவு பெறும் வகைகளின் எண்ணிக்கையும் பெருகிக்கொண்டுபோவதற்கான வழிகள் இருக்கின்றன என்று அமெரிக்க சமூகநல இலாகாவினர் கருதுகின்றனர்.

அறிவியலின் உதவியின்மூலம் உணவு பெருக்கத்தை உற்பத்தியாக்கிக்கொண்டே போனாலும், மக்கள் குடியிருப்பதற்கான இடப் பஞ்சம் ஏற்பட்டுவிடும் என்று சிலர் கருதுகிறார்கள். இப்பொழுது வளரும் விகிதத்தில் மக்கள் எண்ணிக்கை வளர்ந்தால் இன்னும் 2,000 ஆண்டுகளில் மக்கள் நிற்பதற்கு மட்டுந்தான் உலகில் வாழும் இடம் கிடைக்கும் என்று அறுதியிடுகிறார்கள்.

உலகம் எவ்வளவு மக்களை மிகவாகத் தாங்கும் என்பது மொத்தம் உலகில் விளையும் உணவுப்பொருள், அது சரிசமமாகப் பரப்பப்படும் முறை, உற்பத்தியைப் பெருக்க அறிவியல் புரியும் உதவி, செயற்கை உணவு உற்பத்தி ஆகிய இவைபோன்றவைகளைப் பொறுத்திருக்கிறது என்றாலும், பொதுநோக்காகக் கணக்கிடும்போது உலகம் 1500 கோடி மக்களை மட்டுமே மிகவாகத் தாங்கக்கூடியதாக இருக்கும் என்று கூறுகிறார்கள்.

மக்கள் தொகையை அளவுக்கு மீறி பெருக்கிக்கொண்டிருக்கும் நாடுகள், இப்பொழுதிருந்தே அறிவியல் அடிப்படையில் கருத்தடை முறையைக் கையாண்டால்தான், வருங்கால வாழ்வைப் பற்றிய அச்சம் குறைய வழியேற்படும்.

தொடர்கதை

பனி வெளியில்

[இரா. செழியன்]

இரவு நெடுநேரம் ஆகியும், தூக்கம் பிடிக்காமல் உட்கார்ந்திருந்தான். பத்திரிகையைப் புரட்டினுல், அவன் கண்களுக்கு காலையில் நடந்த வழக்கின் விபரங்களே முதலில் காணப்பட்டது.

மறுபடியும் குற்றவாளிகள்,—கற்பிழந்த பெண், அவளுக்காகக் கொலைக்குத் தயாரான கள்ளக்காதலன், இருவரும் அவன் ஞாபகத்துக்கு வந்தனர்.

மாலை நித்தியானந்த சாமிகள் பேசியது ஞாபகத்துக்கு வந்தது. "மனிதனுக்கு ஒழுக்கத்தில் எப்பொழுது கேடுவருகிறதோ, அப்பொழுது அவன் பலமற்றவனுகிறுன்" என்று அவர் பேசுவது எதிரொலித்தது. மீண்டும், "பெண்ணுகி வந்ததொரு மாயப்பிசாசம்" என்று அவர் பாடியது கேட்டது. அவ்வாறு பெண்ணைப் பிசாசு என்று கூறுவது அதிகம் என்றுலும் அவ்வாறு சொல்வதில்சிறிது உண்மையிருப்பதாகக் கமலநாதனுக்குப் பட்டது. அவர்கள் ஒழுக்கங்கெட்டால், எவ்வளவு கொலை, களவு முதலிய பெருங்குற்றங்கள் நடைபெறுகின்றன.

திடீரென்று, தான் வீடு திரும்பியபொழுது தங்கம் சிரித்துக்கொண்டிருந்தது அவன் ஞாபகத்துக்கு வந்தது. ஆரம்பத்திலிருந்தே கமலநாதனுக்கு குலசேகரனைக் கண்டால் பிடிப்பதில்லை. அதிலும் தனக்கு முன்னதாக அவனுக்கு தங்கத்தைத் தெரியுமென்பது ஒரு வகைப் பொருமை உணர்ச்சியை அவன் உள்ளத்தில் உண்டாக்கியது. சேகரனிடம் தங்கம் பேசும்பொழுது, இளம்பருவத்தில் பழகியதில் ஏற்பட்ட உரிமையால், "நீ எப்பொழுது வந்தாய்?" "உன்னைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை!" என்று சில சமயங்களில் "நீ" என்று ஒருமைப்படுத்திப் பேசும்பொழுது கமலநாதனுக்கு உறுத்தியது.

"சேகரனைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி என்னைக் கேட்டார்கள்!" முன்பொருமுறை தங்கம் கூறியது அவன் நினைவுக்கு வந்தது.

அப்படிப்பட்ட சேகரனுடன் தங்கம் ஏன் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கவேண்டும்? நெருங்கிய உறவு, இளமையில் ஒன்றுக வளர்ந்தது எல்லாமிருக்கலாம். ஆனுல் யாராவது பார்த்தால்...

சே! ஏன் இந்தத் தவருன எண்ணங்கள்? என்று தன்னைத்தானே கடிந்துகொண்டு, கமலநாதன் தோட்டத்தில் உலவச்சென்றுன். அவன் மனம் நிம்மதியற்றிருந்தது.

தோட்டத்தில் கடுமையான மூடுபனி சூழ்ந்திருந்தது. அதில் மரஞ்செடிகள் மங்கி மறைந்திருந்தன, நிலவு வெளிச்சமும் குறைவுபட்டிருந்தது. நடக்கும்பொழுது, இரண்டடிக்கு மேல் இருப்பது தெரியாது. தோட்டத்தில் பாதை கமலநாதனுக்கு நன்ருகப் பழக்கமானதால், அவன் கால்கள் தாமாக நடந்து சென்றன. அங்கு போடப்பட்டிருந்த கற்பலகையில் உட்காரக் கமலநாதன் போனுன். கையை வைத்ததும், சுரீரென்று அதிலிருந்த குளிர் தாக்கியது. கமலநாதன் எழுந்து மீண்டும் உலவினுன். அருகிலிருக்கும் வீடு பனியில் மறைந்திருந்தது. அதை நோக்கி நடந்து வரும்பொழுது, நிழல்போலச் சிறிது சிறிதாக உருவம் வளர்ந்துவரும்; பின் திரும்பிச் சென்று சற்றுதூரம் போனதும் பார்த்தால், வீடு மங்கி, மறைந்திருக்கும்.

சூழவும் பனிப்புகை, லேசானகுளிர், மங்கிய வெளிச்சம், இவற்றை அதிகப்படுத்திக் காட்-

டும் விதத்தில் ஆழ்ந்த அமைதி! கமலநாதன் நடந்துவரும்பொழுது ஏற்படும் சலசலப்பைத் தவிர, வேறு சத்தம் எதுவும் கிடையாது. இந்தச் சூழ்நிலை கமலநாதனின் உள்ளத்தை அழுத்துவதுபோலிருந்தது. கமலநாதன் மீண்டும் வீட்டிற்குள் சென்ருன்.

உள்ளே எல்லாம் ஒழுங்காக இருந்தன. சுவற்றிலிருந்த கடிகாரம் "டிக்" "டிக்" என்று லேசாக் ஒலியெழுப்பிக்கொண்டிருந்தது. மாடிக்குச் சென்று கமலநாதன் தன் படுக்கையில் படுத்தான்.

அப்பொழுதும் அவனுடைய மனம் அமைதியற்றிருந்தது. மீண்டும் மீண்டும் ஏனோ, குற்றவாளிகளின் முகங்கள், நித்தியானந்த சாமியின் பேச்சு, தங்கத்தின் சிரிப்பு, நினைவுக்கு வந்தன! அவன் என்றுமில்லாதவாறு சோர்வடைந்திருந்தான். எதையும் தெளிவாக எண்ணிப்பார்க்கவில்லை. நெடுநேரம் தூக்கம் வரவில்லை. அவன் மனதில் லேசான மூடுபனி சூழ ஆரம்பித்தது. பனி படர்ந்த வெளியில் நடந்திடும் மனிதனைப்போல, குழப்பமடைந்த அவன் மனத்தில் பல எண்ணங்கள் உலவிக்கொண்டிருந்தன. எதுவும் தெளிவாகக் காணப்படவில்லை.

பக்கத்திலிருக்கும் விளக்கை கமலநாதன் போட்டான். தங்கம் நன்ருக உறங்கிக்கொண்டிருந்தாள். லேசான மூச்சு வந்து போய்க்கொண்டிருந்தது. அவள் முகம் மிக அமைதியில் ஆழ்ந்திருந்தது.

இரவு மணி இரண்டு அடித்தது. கமலநாதன் விளக்கை அணைத்தான். மறுபடியும் இருள் சூழ்ந்துகொண்டது.

* * *

டாக்டர் சஞ்சீவி, டாக்டர் தங்கம் இருவரும் அனுதைச் சிறுவர் இல்லத்தில் நுழைந்தனர். சகுந்தலா அங்கு வேலையேற்று மூன்று மாதங்களாகின்றன. அதற்குள் அவளுடைய திறமை வெளிப்பட்டு, எல்லோருடைய பாராட்டுதலுக்கும் ஆளானுள். தனது வேலையில் மிக உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் சகுந்தலா ஈடுபட்டாள்.

அந்த இல்லத்தில் இருந்தவர்களெல்லாம், அனுதைச் சிறுவர்கள், திக்கற்றவர்கள், பெற்றவர்களால் கைவிடப்பட்டவர்கள், பத்து நாள் இருபதுநாள் சேயிலிருந்து; எட்டு ஒன்பது வயதுச் சிறுவர் சிறுமியர்வரை அங்கு இருந்தனர். தாயன்பு, தந்தையன்பு அறியாதவர்களாய்; ஒருங்கே அங்கு அவர்கள் கூட்டமாக வாழ்ந்தனர். அந்த இல்லத்திற்குள் சகுந்தலா நுழைந்ததும், அந்தச் சிறுவர்கள் எல்லோரும் ஓரிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். "புதிய வாத்தியார் வருகிருர்" என்றதும் எல்லோரும் மிக நடுங்கிக்கொண்டு நின்றனர். அதற்கு முன்னிருந்தவர் மிகக் கடுமையாக நடந்துகொள்வாராம். ஏதாவது சிறு பிழை செய்தாலும் சரியான தண்டனை கிடைக்கும். அதனுல் வாத்தியார் என்றுலே சிறுவர்கள் குலை நடுக்கமுற நிற்பார்கள். அந்த ஆசிரியரும் வேண்டுமென்று கொடுமை பாராட்டவில்லை. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்ற முதுமொழியை மனதில் வைத்து, வளைக்கவேண்டுமென்பதற்காக வளைத்து முறித்துவிடுமளவுக்கு அவர் சிறுவர்களைக் கண்காணித்துவந்தார். அவர் அந்த வேலையை விட்டுப் போனதும், சிறிது காலம் அவர்களுக்கு நிம்மதியிருந்தது. பின்பு திடீரென்று ஒரு "வாத்தியாரம்மா வந்திருக்கிருர்கள்!" என்று ஆயா வந்து கூப்பிட்ட பொழுது சிறுவர்கள் தங்கள் விளையாட்டை விட்டுப், பயத்துடன் வந்து நின்ருர்கள்.

சகுந்தலாவுக்கு அவர்களைப்பார்த்தபொழுது அவர்களுடைய பயம்—அவர்களுடைய பார்வையில் இருந்த வெறுப்புணர்ச்சி இவை புரியவில்லை. அவர்களைப் பார்த்துச் சிரித்தாள். அவர்கள் விழித்த பார்வை மூடாமல், முகத்தில் எத்தகைய அசைவுமின்றி பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்களிடம் என்ன பேசுவது என்று சகுந்தலாவுக்குப் புரியவில்லை. "இப்பொழுது என்ன செய்துகொண்டிருந்தீர்கள்?" என்று கேட்டாள்.

அவளுடைய கேள்வி சிறுவர்களுக்குக் கடுமையானதாகப்பட்டது. விளையாடிக்கொண்டிருந்தோம் என்ருல் எல்லோருக்கும் தண்டனை கிடைக்கும். கூட்டம் மீண்டும் அமைதியைக் கடைப்பிடித்தது. கேள்விக்குப் பதில் வராததைப் பார்த்ததும், சகுந்தலாவுக்கு நிலைமையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சுற்றிலும் சிறிதுநேரம் பார்த்துவிட்டு, ஒரு நான்கு வயதுச் சிறுவனைக் கூப்பிட்டு, "உன் பெயரென்ன?" என்றுகேட்டாள்.

அவன் "கோ" வென்று அழ ஆரம்பித்துவிட்டான். மற்ற சிறுவர்கள் இன்னும் வெறுப்புடன் அவனைப் பார்க்க ஆரம்பித்தனர். நிலைமை சங்கடமாகிவிட்டது. அழுதுகொண்டிருக்கும் சிறுவனைச் சமாதானப்படுத்துவதற்குள் போதுமென்ருகிவிட்டது.

"நீ ஏன் அழுகிருய்?"

"என்னை அடித்துவிட்டீங்க!" மற்ற மாண வர்களும் அதை ஆமோதிப்பதுபோல் பார்த் தனர். சகுந்தலா திடுக்கிட்டுவிட்டாள்.

"உன்னை யாரும் அடிக்கவில்லை. சரி! என்ன செய்துகொண்டிருந்தீர்கள்?" என்று மீண்டும் பழைய கேள்வியைக் கேட்டாள்.

"நான் விளையாடவில்லை."

சகுந்தலாவால் ஓரளவு புரிந்துகொள்ள முடிந்தது. "நீ விளையாடப்போகிறாயா?"

"வேண்டாம்!" என்று சிறுவன் கண்டிப் பாகச் சொன்னான்.

"நீங்களெல்லாம் விளையாடப் போகலாம். மணியடித்ததும் திரும்பி வந்துவிடவேண்டும்" என்று சொன்னாள்.

சிறிதுநேரம் சிறுவர்கள் பேசாமலிருந்தனர். அவர்களால் அதை நம்பமுடியவில்லை. முன் பிருந்த வாத்தியார் இப்படி எப்பொழுதும் சொன்னதே கிடையாது. பின்பு சிறிதுநேரம் மலைத்து நின்றபின்பு, "புதிய வாத்தியாரம்மா" சொல்வது உண்மையாக என்று தெரிந்தது. மெதுவாக ஒருவர் பின்னொருவராக ஹாலை விட்டு வெளிவந்தார்கள். வெளிவந்ததுதான் தாமதம், ஒரே கூச்சல்போட்டுக்கொண்டு தோட்டத்திலிருக்கும் பெரிய ஆலமரத்தடிக்கு ஓடினார்கள்.

வெகு சீக்கிரத்தில் சகுந்தலா அவர்களது நம்பிக்கையையும், அன்பையும் பெற்றுவிட் டாள். சிறுவர்கள் "அம்மா!" என்று கூப்பிட்டுக்கொண்டு அவளைச் சூழ்ந்துகொண் டிருந்தனர். காலையில் எட்டு ஒன்பதிலிருந்து பதினொரு மணிவரை, ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஏதாவது பாட்டுக்கற்றுக்கொண் டிருப்பார்கள், எழுத்துக்கள், "ஒன்று இரண்டு மூன்று" என்று எழுதுவார்கள். பின்பு மாலை முழுவதும் ஆலமரத்தடியில் விளையாட்டுதான். சகுந்தலா அந்தச் சிறுவர்களுக்குக் காலைப் பள்ளிக்கூடத்தை நடத்தியதுடன், மாலை அவர்களுடைய விளையாட்டிலும் கலந்து கொள்வாள்.

அவளுடைய கைக்குழந்தை வளர்ந்துவந் தது. அதற்கு என்ன பெயரிடுவது? சகுந் தலா அடிக்கடி யோசித்து வந்தாள். எந்தப் பெயரும் அவளுக்குப் பிடித்தமானதாகத் தெரியவில்லை, அனாதை இல்லத்தில் சேர்க் கப்படும் குழந்தைகளுக்கு உடனே பெயர் வைத்துவிடுவார்கள். சகுந்தலாவின் குழந் தைக்கு அங்கிருக்கும் சிறுவர்கள் "மணி!" என்று பெயர்வைத்தார்கள். பெரும்பாலும் மணியைச் சூழ்ந்து, நாலைந்து சிறுவர்கள் கொஞ்சிக்கொண்டிருப்பார்கள். தாய் தந்தை யின் கொஞ்சுதலை அறியாத அவர்களுக்கு, இப்படி ஒரு குழந்தையைக் கொஞ்சிக்கொண் டிருப்பது ஆனந்தமாக இருந்தது.

"அழாதேடா, கண்ணு!" என்று ஒரு பெண் கொஞ்சுவாள்.

"நீ எட்டிப்போ! உன்னைப் பார்த்துதான், அவன் அழுகிறான்! இதோ பார்! மணி! மணி!" என்று இன்னொரு பையன் வேடிக்கை காட்டுவான்.

அதற்குள் ஒரு பெண் ஓடிப்போய் "அம்மா! மணி அழுகிறான்!" என்று சகுந்தலாவைக் கூப்பிட்டுவந்துவிடுவாள்.

அவர்கள் யாரோ, தான் யாரோ! அவர்கள் "அம்மா!" என்று கூப்பிடும்பொழுது, சகுந் தலாவுக்கு அவர்களுடைய திக்கற்ற நிலைமை புலப்படும். அவர்கள் மட்டுமென்ன, தான் கூட திக்கற்ற நிலையில், கைக்குழந்தையுடன் தானே அந்த இல்லத்தில் வந்து சேர்ந்தோம் என்று நினைத்துக்கொள்வாள்.

அவ்வாறு ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும் பொழுது டாக்டர் சஞ்சீவியும், தங்கமும் வந்து சேர்ந்தார்கள். சகுந்தலா அவர்களை வணங்கி விட்டு, குழந்தையைத் தொட்டிலில் போட் டாள்.

"குழந்தை எப்படியிருக்கிறது? போன முறை வந்தபொழுது சிறிது சளி இருந்தத்தே!" என்று டாக்டர் சஞ்சீவி கேட்டார்.

"மருந்து கொடுத்ததும், குணமாகிவிட்டது, டாக்டர்!" என்று சகுந்தலா பதிலளித்தாள்.

தொட்டிலருகே சென்று தங்கம் குழந்தை யின் கன்னத்தைத் தட்டி விளையாட்டு காட்டி னாள். குழந்தை வைத்தவிழி வாங்காமல் பார்த்தபடி இருந்தது.

"சிறுவர்கள் எப்படி இருக்கிறார்கள்?" என்று சஞ்சீவி சுற்றிலும் பார்த்தார். மரத்தடி யில் ஊஞ்சல் ஆடிக்கொண்டும், வேறு விளை யாட்டுகளில் ஈடுபட்டும் அவர்கள் காணப்பட் டனர்.

"எல்லோரும் நன்றாக இருக்கிறார்கள். அந் தப் பையன்—சுந்தரம் இன்னும் எடை கூட வில்லை. மெலிந்து, எலும்புந் தோலுமாக இருக் கிறான். அவனுக்கு ஏதாவது செய்யவேண் டும்!"

வெளியில் போய் அந்தப் பையனை சகுந்தலா கூப்பிட்டாள். கன்னம் ஒட்டி, மிக மெலிந்த பையன் ஒருவன் வந்து நின்றான்.

"ஓ! அவன் அவனுடைய அம்மாவைப் போல மிக மெலிந்து இருக்கிறான். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது, அவன் பிறக்கும் பொழுது ஐந்து பவுண்டுக்குள்தான் எடை இருந்தது. அவனுக்குத் தகுந்த உணவு போட்டு எடையைக் கூட்டவேண்டும்."

"இல்லை, டாக்டர்! மற்ற சிறுவர்களை விட்டு ஒருவனுக்கு மட்டும் தனியாகப் பாலும்,பழமும் கொடுத்தால், மற்றவர்களும் இந்த நிலைக்குத் தங்களைத் தயார் செய்துகொள்வார்கள்."

சகுந்தலா சொல்வதும், தங்கத்துக்குச் சரி யென்று பட்டது.

"அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்து, ஒரு மாதத்துக்குக் கவனிக்கலாம்; நாளைக்கு அவனை என்னுடைய வார்டுக்கு அனுப்பு!" என்று தங்கம் சொன்னாள்.

"பையன் உடைகள் தைக்கவேண்டும். போன தடவை வந்தபொழுது சொன்னேன், உருப்படியாக ஒவ்வொருவருக்கும் ஒரு காற் சட்டை, மேல்சட்டை தவிர வேறு இல்லை, அதுவும் இப்பொழுது குளிர்காலம். ஏதாவது செய்யவேண்டும்!" என்று தங்கம் மெதுவாகச் சொன்னாள்.

டாக்டர் சஞ்சீவி தனது நெற்றியைச் சிறிது தடவிக்கொண்டார். "நான் மறந்துவிட வில்லை. மொத்தம் நானூறு ரூபாயாவது வேண்டியிருக்கும். இந்தமாதக் கடைசியில் ஏற்பாடு செய்யலாம். மறந்துவிடாமல் அதற்கும் சேர்த்து மனுப்போடவேண்டும். அடுத்த மாதம் 16, 17-ல் ஆண்டுவிழா வரும். அதற்குள் புதுத்துணிகள் வந்துவிடும்."

"ஆண்டுவிழாவுக்கு நாள் குறித்தாகிவிட் டதேயொழிய, அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லையே, டாக்டர்!" என்று தங்கம் சொன்னாள்.

"ஏற்பாடுகள் என்ன? நன்கொடைகள் சேர்க்க ஆரம்பிக்கவேண்டும். ஆண்டுதோறும் இப்படித்தான் செய்யவேண்டி யிருக்கிறது! நாளைக்கு நன்கொடைச் சீட்டுகள் தயாராகி விடும்."

டாக்டர் சஞ்சீவியும், தங்கமும் சிறிதுநேரம் சுற்றிப் பார்த்துவிட்டுப் போனார்கள்.

போகும்பொழுது டாக்டர் சஞ்சீவி, "சகுந் தலா திறமைசாலிதான்! அவள் கண்காணிப் பில் சிறுவர்கள் ஒழுங்காக வளர்க்கப்படுகிறார் கள். அவளுக்குச் சம்பளம் கூடப் போடச் சொல்லி, சிபாரிசு செய்யவேண்டும்!" என்று சொன்னார்.

"சம்பளத்தைப் பற்றி அவள் குறைபட்ட தாகத் தெரியவில்லை. இப்பொழுதுள்ள நிலை யில் அவள் திருப்திகரமாக இருக்கிறாள்" என்று டாக்டர் தங்கம் பதிலளித்தாள்.

(தொடரும்)

தொடர்ந்து மொழிபெயர்க்கப்படும் நூல்கள்

உலகின் பல்வேறு மொழிகளிலும் ஒரு சில நூல்களே அடிக்கடி தொடர்ந்து மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. முன்னைய நூற்றாண்டுகளில் பல்வேறு நாடுகளி லும் வாழ்ந்த மிகச்சிறந்த ஒருசில ஆசிரியர்களின் நூல்கள் மட்டுமே பல்வேறு மொழி களிலும் புதிது புதிதாக மொழிபெயர்க்கப்படுவதையும், தொடர்ந்து வெளியிடப்படுவ தையும் காணலாம். இந்தவகையில் முதல் இடம் பெறுகிற நூல் பைபிள் ஆகும். பைபிள் சமயச்சார்பான நூல் ஆனபடியாலும், நாகரிக வளர்ச்சியடைந்த நாடுகளின் பெருமுயற்சியால் வலிவான அமைப்புகளைக் கொண்டு உலகெங்கும் பரப்பப்படுகிற காரணத்தாலும், அது பெரும்பாலும் உலகமொழிகள் எல்லாவற்றிலும் அடிக்கடி மொழிபெயர்க்கப்பட்டு, அடிக்கடி வெளியிடப்படும் நூலாக இருந்துவருகிறது. அதனை அடுத்து மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படும் நூலாசிரியர்களின் வரிசை முறையே செகப்பிரியர், மோலியர், தாந்தே, செர்வாந்தாசு, கதே, உரூசோ, வால்டயர், அரிசு டாட்டில், பிளேட்டோ, ஓமர், யூரிபிடீசு, திக்கென்சு, பால்சாக், மாபசான், தால்சுதாய், கியூகோ, சோலா ஆகும்.

அண்டசராசரம்-11

[இரா. செழியன்]

[இந்து மதத்தின் வேத, புராணங்களின்படி, அண்டசராசரங்களையெல்லாம் பிரமதேவன் படைத்தான். இவ்வளவு பெரிய பிரமாண்ட படைப்புக்கு ஆதாரமாக—அஸ்திவாரமாக ஒரு ஆமை வைக்கப்பட்டது. ஆமை முதுகின்மேல் அஷ்டதிக்கு யானைகளும், ஆயிரந்தலை ஆதிசேடனும் இருக்கின்றன. அவைகளுக்குமேல் ருத்ரர்கள் வசிக்கும் ருத்ரபுவனம் இருக்கிறது. ருத்ரபுவனத்துக்குமேல் புகைமண்டலம். புகைமண்டலத்துக்குமேல் வெட்டவெளி. அவற்றுக்குமேல் யமபட்டணங்களும், அதையடுத்து 28 கோடிநரகங்களும் நிற்கின்றன. நரகலோகத்தின்மேல் கூஷ்மாண்டபுவனம் அதற்குமேல் ஏழு பாதாளங்கள், அதையடுத்து ஆடகேசுரபுவனம், அதையும் கடந்தால் பூலோகம். பூலோகத்திற்கு உயரே புவலோகம் ஆரம்பிக்கிறது. புவலோகத்தில் மேகமண்டலங்களும், வீரசுவர்க்கமும், காந்தருவர் வித்தியாதரர்களும், கருடன், ஐராவதம் போன்றவைகளும் உள்ளன. புவலோகத்துக்கு மேல் சூரியலோகம். சூரியலோகத்துக்கு அப்பால் சந்திரலோகம். சந்திரலோகத்துக்கு மேல்நோக்கி அடுத்தடுத்து முறையே நட்சத்திரமண்டலம், செவ்வாய் மண்டலம், புதன் மண்டலம், பிரகஸ்பதி மண்டலம், சுக்கிரமண்டலம், சனிமண்டலம் முதலியன இருக்கின்றன. சனிமண்டலத்தில், சனிபகவானைத் தவிர, இராகு கேதுக்கள் இருக்கின்றன. அதற்கு மேலுள்ள சப்தரிஷி மண்டலத்தில், அத்திரி, வசிட்டர் முதலான ஏழு ரிஷிசிரேஷ்டர்கள் இருக்கின்றனது. சப்தரிஷி மண்டலத்திற்குமேல் சிஞ்சுமாரம் என்ற காலச்சக்கிரம் இருக்கிறது. அதற்குமேல் இந்திரலோகம் இருக்கிறது......]

உருக்குமாங்கதன் உருவத்தில் இந்திரன் நின்றுகொண்டிருந்தான். தான் எண்ணி, ஏக்கமடைந்து. தீராத காதலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த உருக்குமாங்கதன், கடைசியாக வந்துவிட்டான் என்று நினைத்து, மகிழ்வோடு முகுந்தை அவனை நோக்கினாள். முன்போல கோபத்துடன் அவன் பார்க்கவில்லை. அவன் முறுவல் செய்தான்.

முகுந்தை தாவி விழுந்தாள்: உருக்குமாங்கதன் உருவிலிருந்த இந்திரன் அவளை வாரி எடுத்தான். சருகு சலசலத்தது; பஞ்சபாணன் தோற்றோடினான்.

இந்தச் சந்திப்பு நாள்தோறும் நடைபெற்றது. உருக்குமாங்கதன் உருவில் இந்திரன் பொழிலிடத்தில் வந்து காத்திருப்பான். தன்னை அலங்கரித்துக்கொண்டு, முகுந்தை அங்கு வருவாள் தான் விரும்பியபடி உருக்குமாங்கதனை அடைந்துவிட்டோமென்ற பூரிப்பில் முகுந்தை இருந்தாள். பாவம்! முகுந்தையின் கணவர், கவிமுனிவருக்குப் பக்கத்தில் நடக்கும் காதல் நாடகம் தெரியவில்லை போலும். மூன்று லோகத்தையும், முக்காலத்தையும் ஞானதிருட்டியால் உணரவல்ல முனிவருக்கு, தனது மனைவி முகுந்தை நடத்திடும் கள்ளக் காதல் தெரியாது போய்விட்டது! அவர் "அரிஹரி மாதேவா!" என்று பஜனை பாடிக்கொண்டிருக்கும்பொழுது, "ஆகா! என் பிரியபதே!" என்று இந்திரன் மார்பில் சாய்ந்து, முகுந்தை பாடிக்கொண்டிருந்தாள்.

மற்றோர்புறம், முகுந்தையின் இழிவு நடத்தைக்கு உடன்பட மறுத்துச் சென்ற உருக்குமாங்கதன் கதியைப் பார்க்கலாம். முகுந்தை அவனைக் கூடாவொழுக்கத்துக்கு அழைத்தது மன்னிக்கமுடியாத பாவம். தகாத செயலுக்கு உடன்பட மறுத்தது உருக்குமாங்கதனின் நேர்மையான செயல். இதில் தண்டிக்கப்படவேண்டியது, குருபத்தினி முகுந்தை, போற்றப்படவேண்டியது மன்னன் உருக்குமாங்கதன். ஆனால் நடந்தது என்னவென்றால், "என் அன்பழைப்பை மறுத்த, நீ குட்டநோய்கொண்டு அலைக!" என்று முகுந்தை இட்ட சாபம் உருக்குமாங்கதனைப் பற்றிக்கொண்டது. வேட்டையாடிக்கொண்டிருக்கும்பொழுது உருக்குமாங்கதனின் உடலில் வெண்குட்டம் பரவிவிட்டது. அவனைப் பார்த்த அமைச்சர்கள் அடையாளந் தெரி

யாது திகைத்தனர். அரண்மனை வைத்தியர்களால், அந்த நோயைத் தீர்க்கமுடியவில்லை. ஆணழகனை விளங்கிய மன்னன், இப்பொழுது வெண்குட்டத்தால் உருவம் மாறி, பார்க்க அருவருப்புடனிருந்தான். இந்த அலங்கோலத்தில், தான் நாடு திரும்பமுடியாதென்று கூறி, காட்டிலேயே உருக்குமாங்கதன் தங்கி விட்டான். மன்னன் கடுமையான நோய்வாய்ப் பட்டு காட்டில் தங்கிவிட்ட செய்தி நாடெங்கும் பரவியது. சிறுகச்சிறுக அந்தச் செய்தி நகர்ந்து, காட்டுக்கு வந்தது. பர்ணசாலையில் உட்கார்ந்திருக்கும் கவிமுனிவர் காதிலும் விழுந்தது. அதை அவர் தன் தர்மபத்தினி முகுந்தையிடம் சொல்லிவைத்தார்.

அந்தச் செய்தியை முகுந்தையால் நம்ப முடியவில்லை. நாள்தோறும் உருக்குமாங்கதனைச் சந்தித்துவருகிறேம். அவன் எப்படி குட்டநோய் கொண்டவனுவான்? என்று முகுந்தை யோசித்தாள். அவளுக்குச் சந்தேகமும், திகிலும் உண்டானது.

வழக்கம்போல, உருக்குமாங்கதன் வேடத்தில் இந்திரன் காத்துக்கொண்டிருந்தான். முகுந்தை அங்கு வந்ததும், எதிரே நிற்பவனை ஏற இறங்கப் பார்த்தாள். எத்தகைய வேறுபாட்டையும் காணமுடியவில்லை.

"ஏன் அப்படிப் பார்க்கிறுய், அன்பே?" என்று இந்திரன் கேட்டான்.

"நீ யார்?" என்று முகுந்தை கேட்டாள்.

"நல்ல கேள்வி! நான் உன் காதலன், காந்தர்வ மணத்திலே உன்னைப் பெற்றவன், உன் அடிமை! இன்னும் சொல்லட்டுமா, இங்கே வா!" என்று அவள் கையைப்பற்றி இந்திரன் இழுத்தான்.

கையை உதறிக்கொண்டு, "நீ யார்? உண்மையைச் சொல்லிவிடு!" என்று முகுந்தை கோபத்துடன் கேட்டாள்.

இந்திரனுக்குச் சற்று பயம் வந்தது. ரிஷி பத்தினியின் கோபம் பொல்லாதது. அவள் கோபத்துக்கு ஆளாகி உருக்குமாங்கதன் உருக்குலைந்து காட்டில் அலைவது அவனுக்குத் தெரியும். எனவே, அவளுடைய சாபத்துக்கு அஞ்சி இந்திரன் தன் சுய உருவைக் காட்டினுன்.

"நான் இந்திரன்! உன்மேல் கொண்ட மையலால், உருக்குமாங்கதன் உருவில் வந்தேன்! என் பிழையை மன்னித்துவிடுக!" என்று மண்டியிட்டு வணங்கினுன். எவ்வளவு தான் அவள் கற்பிழந்தவளாக இருந்தாலும் ரிஷி பத்தினியாயிற்றே! எனவே அவளுடைய கோபத்தை மட்டுப்படுத்த, இந்திரன் அவ்வாறு செய்தான்.

முகுந்தைக்கு அடங்காத கோபம் வந்தது. இவ்வளவு நாளும் தான் ஏமாற்றப்பட்டோம் என்பதை நினைக்கும்பொழுது. மறுகணம் கீழ் மண்டியிட்டு இருக்கும் இந்திரனைப் பார்த்தாள். இந்திரன்! அவள் விரும்பியது மண்ணுலக அரசனை, இவனே தேவர்களுக்கெல்லாம் அரசன்! அவனுடைய அரண்மனையில் ஊர்வசி, ரம்பை, திலோத்தமை போன்ற அழகிகள் பலர் இருக்கின்றனர். ஆனல் அவர்களையெல்லாம் துச்சமாக மதித்து, தன் அழகில் மயங்கி, அவன் காட்டுக்கு மாறுவேடம் பூண்டு வந்திருக்கிருன் என்பதை நினைத்து முகுந்தை பெருமைப்பட்டாள்.

"உன்னுடைய உலகில், உன்னுடைய அரண்மனையில் அழகிகள் யாருமே கிடையாதா?"

"அழகிகள் ஆயிரமாயிரமாக இருக்கிருர்கள். ஆடுவார்கள், பாடுவார்கள். ஆனல் அவர்களெல்லாம் உன்னெதிரில் நிற்கக்கூடத் தகுதியற்றவர்கள்! உன்னைப்போன்ற அழகி இந்த ஈரேழு பதினைந்து லோகத்திலும் கிடையாது!" முகுந்தை பெருமையுடன் நின்றுள். இந்திரனுக்குச் சற்று உயிர் வந்தது.

"ஆனுலும் நீ மாறுவேடமணிந்து, என்னை ஏமாற்றியது?"

"குற்றம்தான்!" இந்திரனுக்குச் சற்று அச்சமுண்டாகியது.

"அதற்காக உனக்குத் தண்டனை தரப் போகிறேன். இப்படி மாறுவேடமணிந்து மாலை வேளையில் ஏமாற்றிச் செல்வது மட்டும் இனி நடக்காது." இந்திரன் நடுங்கினுன். கடுமையான சாபம் வரப்போகிறது என்று அஞ்சினுன். "இன்று இரவு, என் கணவர் ஒரு யாகத்தை ஆரம்பிக்கப்போகிருர். அதற்கு இரவு பூராவும் வேள்வித்தீயை மூட்டி நிஷ்டையிலிருப்பார். அந்தச் சமயம் நீ பர்ணசாலையின் மறுபுறம் எனக்காகக் காத்திருக்கவேண்டும். அதுதான் தண்டனை!"

இதைப்போல முகுந்தை தரும் தண்டனைகளை, இந்திரன் மிகுந்த பணிவுடன் நிறைவேற்றிக்கொண்டிருந்தான்.

முகுந்தையின் வயிற்றில் கரு வளர்ந்தது. கவிமுனிவர் தனக்கு ஒரு குமாரன் பிறக்கப் போகிருனென்று கொண்டாடினர்.

உரிய காலத்தில் முகுந்தைக்குக் குழந்தை பிறந்தது. அதற்கு கிருச்சமதர் என்று பெயரிட்டு, கவிமுனிவர் வளர்த்தார். அவனைத் தன் மகனைப் பாவித்து, அவனுக்கு வேத சாஸ்திரங்களைச் சொல்லிக்கொடுத்து, கிருச்சமதனையும் பெரிய ரிஷியாக கவிமுனிவர் ஆக்கினார்.

ஒருசமயம் சப்தரிஷிகளில் ஒருவரான அத்திரிக்கும், கிருச்சமதனுக்கும் வாக்குவாதம் வந்தது. அதில் கிருச்சமதன் வெற்றிபெற, கோபங்கொண்ட அத்திரி "நீ கவிமுனிவருக்குப் பிறந்தவனல்லன்!" என்று இழித்துக் கூறினார். கிருச்சமதன் தன் தாயிடம் வந்து உண்மையைக் கேட்டான். அந்த ரிஷிபத்தினி எத்தகைய பதிலைத் தருவாள். கொண்டது கவிமுனிவரை, விரும்பியது உருக்குமாங்கதனை, அடைந்தது இந்திரனை! கடைசியாக, கிருச்சமதன் உண்மையறிந்து, தன் தாயை இலந்தை மரமாகச் சபித்துவிட்டுப் போனான். முகுந்தை பதிலுக்கு, தன் மகனைப் பார்த்து "உனக்கு கொடிய புத்திரன் பிறப்பான்" என்று சாபம் தந்தாள். முகுந்தை இலந்தை மரமானாள். கிருச்சமதனுக்கு பலி என்ற அசுரன் குமாரனாகப் பிறந்தானென்று புராணம் கூறுகிறது.

இந்தக் கதையில், எவ்வளவு அநீதியான சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன பாருங்கள்! தகாத செயலுக்கு உடன்பட உருக்குமாங்கதன் மறுத்தான். அதனால் குட்டநோய் கொண்டு அவன் அலைந்தான். மாறுவேடம் பூண்டு, முகுந்தையிடம் இந்திரன் குலவினான். அவனுடைய ஒழுக்கங்கெட்ட தன்மைக்கு தண்டனை ஏதும் தரப்படவில்லை.

மாறுவேடம்பூண்டு ரிஷி பத்தினிகளைக் கைப்பற்றுவதில் இந்திரன் நிபுணனாக இருந்திருக்கிறான். தேவசன்மா என்ற முனிவரைப் போல வேடந்தாங்கி, அவருடைய மனைவியை அடையச்சென்றான். உருக்குமாங்கதனைப் போல மாற்றுருக்கொண்டு, முகுந்தையை அனுபவித்தான். கௌதமரைப்போல வேடமணிந்து, அகலிகைமீது தான் கொண்ட வேட்கையைத் தீர்த்தான். இவ்வளவு வேடதாரி, ஒழுக்கங்கெட்ட ஊதாரி, அவன்தான தேவர்களுக்குத் தலைவனாக, இந்திரலோகத்து அரசனாக ஆக்கப்பட்டான். மாற்றாரின் மனைவியரை அடைவதற்கு அவன் மனித உருவாக மட்டுமல்ல, மிருகமாகக்கூட உருமாறிச் சென்றிருக்கிறான்.

ஆரியர்களது வழக்கப்படி, புத்திரப்பேறில்லா அரசர்கள் தமக்குப்பின் அரசாளப் புத்திரனை வேண்டி, புத்திரகாமேஷ்டியாகம் என்று ஒன்று செய்வார்கள். சில புராணங்களில் இதுவே அசுவமேத யாகம் என்றும் குறிக்கப்படுகிறது. இந்த யாகத்தில், தேர்ந்தெடுக்கப்பட்டு மிக அழகான ஆண்குதிரையைக்கொண்டுவந்து யாகசாலையின் மத்தியில் கட்டுவார்கள். அதற்குப் பக்கத்தில் வேள்விக் குண்டத்தில் புரோகிதர்கள், உட்கார்ந்து யாகத்தியை மூட்டி மந்திரங்களைச் சொல்வார்வார். யாகத்தில், சோமரசம் என்னும் கள் படைக்கப்பட்டிருக்கும். யாக முடிவில், அரசனுடைய மனைவி, யாகக்குதிரையை வலம் வந்து வணங்கி, அக்குதிரையை மூன்று வெட்டாக வெட்டி கொல்வாள். அப்படி வெட்டுவதற்கு வேறு யாரும் துணைசெய்யக்கூடாது. குதிரை கொல்லப்பட்டதும், புரோகிதர்களும், யாகம் செய்யும் முனிவர்களும், அரசபிரதானியர்களும் யாகசாலையை விட்டுப்போய்விடுவார்கள். இறந்துபோன குதிரையும், அரசனுடைய மனைவியும் மட்டும் அங்கு தனியாக இருப்பார்கள். அன்றிரவு முழுவதும், தான் செய்யும் தரும காரியத்தில் விருப்பமுடையவளாய், அரசனுடைய மனைவி இறந்துபோன ஆண் குதிரையைக் கணவனாகப்பாவித்துக் கட்டித் தழுவிக்கொண்டிருக்க வேண்டும். காலை வந்ததும், அரசன் தனது மனைவியை, யாகஞ் செய்த புரோகிதர்களுக்கு (ரித்விக்குகளுக்கு) தானம் செய்துவிடுவான். அந்த ரித்விக்குகள் அரசனுடைய மனைவியை தங்களுடன் மறுநாள்வரை வைத்துக்கொண்டிருப்பார்கள். பின் அரசன் பணத்தைக்கொடுத்து, தன் மனைவியைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவான். இதனால் பிள்ளைப்பேறு கிடைத்தால், அது அசுவமேத யாகத்தின் பலனால் வந்ததாகக் கூறுவார்கள். பிள்ளைப்பேறு கிடைக்காவிட்டால் செய்த யாகத்தில் ஏதோ சாஸ்திர சம்பிரதாயக் குறை நேர்ந்துவிட்டதென்று கூறி, ரித்விக்குகள் மறுபடியும் யாகத்துக்குத் தயார்செய்வார்கள். இந்த முறைதான், வேதங்களில் அரசனுக்குப் புத்திரப்பேறு தரும் யாகமாகக் கூறப்படுகிறது. வால்மீகி இராமாயணத்தில், இத்தகைய யாக முறையைச் செய்துதான், தசரதனுடைய மூன்று மனைவிகள் பிள்ளைகளைப் பெற்றதாகக் கூறப்படுகிறது. இனி இந்திரனுடைய கதையைப் பார்க்கலாம்.

பாரிஷதன் என்ற அரசன் ஒருவன் இருந்தான், அவனுக்கு வபுஷ்டை என்ற மனைவி இருந்தாள். அவளுடைய அழகைக் கேள்விப்பட்டு, இந்திரன் பலகாலம் அவளையடையத் திட்டமிட்டிருந்தான். அவன் செய்த பல உபாயங்கள் பலனளிக்கவில்லை.

பாரிஷதனுக்குப் புத்திரப்பேறில்லாத குறை இருந்தது. அதை நீக்க, வேதங்களில் சொல்லியிருக்கிறபடி அசுவமேதயாகம் செய்யத்தொடங்கினன். யாகத்தின் முடிவில், அரசனுடைய மனைவி வபுஷ்டை குதிரையை வலம் வந்து வெட்டிக்கொன்று விட்டாள். அவளையும், இறந்துபோன குதிரையையும் தனியே விட்டு, மற்றவர்கள் போய்விட்டனர்.

வபுஷ்டையின்மேல் தான் வைத்திருந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ள இதுதான் தக்க சமயமென்று கருதிய இந்திரன் இறந்துபோன குதிரையின் உடலில் புகுந்துகொண்டான். வேத முறைப்படி, சாஸ்திர சம்பிரதாயப்படி, அவளுக்கு அவள் கணவனிட்ட கட்டளைப்படி, இறந்துபோனதாகக் காணப்பட்ட குதிரையைக் கணவனுகப் பாவித்துத் தழுவிக்கொண்டாள். குதிரையுருவில் இருந்த இந்திரனும் வபுஷ்டையின் மீதிருந்த ஆசையை நிறைவேற்றிக்கொண்டான். இரவு கழிந்ததும், இந்திரன் தன்னிடம் சென்ருன். குதிரையால் தழுவப்பட்டு, அலங்கோலமான நிலையில் வபுஷ்டை கிடந்தாள். யாகம் செய்யப்பட்டதன் பலன் கிடைக்கவில்லையாம். இந்தக் கதை சிவமகா புராணத்தில் இருக்கிறது. அசுவமேத யாகமே மிக ஆபாசமானது. அந்த ஆபாசத்திலும், ஒரு அநீதியானதும் ஆபாசமானதுமான ஒரு காரியத்தை இந்திரன் செய்திருக்கிருன்.

ஒழுக்கக் கேடுகளையும், ஆபாசச் செயல்களையும் புரிவதில் கண்ணுங்கருத்துமாக இருக்கிற இந்திரன், தேவர்களுக்குத் தலைவனுகவும், சுவர்க்கலோகத்துத் தலைவனுகவும் பிரம்மனல் உண்டாக்கப்பட்டிருக்கிருன். சுவர்க்கலோகத்தின் தலைவனின் யோக்கியதை இந்த அளவில் இருந்தால், அந்த லோகம் எப்படிப்பட்டதாயிருக்கும்? "குச்சு நுழைகிற இராஜாவுக்கு கொள்ளிபிடிக்கிற மந்திரியைப்போல," சுவர்க்கலோகத்தில் மற்றவர்களும் இந்திரனைப்போலவே, "ஒழுக்கக்கேடுகளை" மிகக் கட்டுப்பாடுடன் கடைப்பிடித்து வருவார்கள்.

இந்திரனுக்கு அவனுடைய தேவலோகத்து அரச பதவி நூறு அசுவமேதயாகம் செய்த தன் பலனுகக் கிடைத்ததாம். இந்திரனைப்போல, சிலர் நூறு அசுவமேதயாகம் நடத்தி இந்திரப்பதவியைக் கைப்பற்றதிட்டமிட்டனர். இந்திரன் எப்பாடுபட்டேனும் அந்த முயற்சிகளைத் தடைசெய்துவிடுவான். யாகஞ் செய்பவர்களைக் கலைக்க தன் நடன மாதர்கள் திலோத்தமை, ரம்பையாரை அனுப்பி ரிஷி சிரேஷ்டர்களை மயக்கிவிடுவான். அதனல் யாகம் தடைப்பட்டு, இந்திர பதவிக்கு அவர் இடும் போட்டித் தவிர்க்கப்பட்டுவிடும். ஆனல் ஒருசமயம் நகுஷன் என்பவன் நூறு அசுவமேத யாகங்களை முடித்து இந்திரனுடைய பதவியைக் கைப்பற்றிவிட்டானும். இந்திர பதவி யாருக்கோ, அவர்களுடைய மனைவியாக இந்திராணி இருக்கவேண்டிய 'நீதியும்' இருந்தது. ஆனல் சப்தரிஷிகளின் உதவியால், நகுஷன் பாம்பாகச் சபிக்கப்பட்டு, இந்திரன் மீண்டும் தன் பதவியை அடைந்துவிட்டான். தன்னுடைய பதவிக்கு ஆபத்து வரும்பொழுதெல்லாம் இந்திரன் எப்பாடுபட்டேனும் அதைக் காப்பாற்றிக் கொண்டுவிடுவான், அதற்காக எதையும் செய்ய அவன் தயங்குவதில்லை.

இந்திரனுக்கும், தேவர்களுக்கும் குருவாக அமைந்தவர் பிரகஸ்பதி. அதைப்போல அசுரர்களுக்குக் குருவாக இருந்தவர் சுக்கிராச்சாரி. சுக்கிராச்சாரியின் சாமர்த்தியத்தால் அசுரர் பலம் பெருக ஆரம்பித்தது. இதைக் கண்டதும் தேவர்களுக்கு நடுக்கந்தோன்றியது, தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் தீராத பகையாகையால், ஒருவர் கை வலுத்தால் மற்றவருக்கு அது சரிவு என்றுதான் அர்த்தம். இப்பொழுது அசுரர் கை ஓங்குவதால் தேவர்கள் அஞ்சி, தங்கள் அரசனை இந்திரனிடம் சென்று முறையிட்டனர்,

அசுரர் பலமடைந்து வருவது தேவர் கோமானுக்கும் தெரியும். அவன் தன் குருவான பிரகஸ்பதியைக் கூப்பிட்டு யோசனைகள் கேட்டான். சுக்கிரனைப்போன்ற சாமர்த்தியம் பிரகஸ்பதிக்குக் கிடையாது. இந்த யோசனைக் கட்டத்தில். மற்றொரு அபாயச்செய்தி இந்திரனுக்கு எட்டியது. அதாவது அசுரர்களுக்கு மேலும் பலம் சேர்த்திட, சிவபெருமானை நோக்கி அகோரத் தவம் செய்ய சுக்கிரன் சென்றிருக்கிருரென்பது, அந்தத் தவத்தை முடித்து அவர் நினைக்கும் வரங்களைச் சிவனிடமிருந்து பெற்றுவிட்டால், அசுரர்கள் பலம் அளவுகடந்து, அழிக்கமுடியாததாகிவிடும். பின் தேவர்களுக்குத் தோல்வி நிச்சயம், இந்திரனுடைய பதவி கைமாறிப் போய்விடும். அத்துடன் இந்திராணி, அரம்பையர் கூட்டம், பாரிஜாதம், கற்பகத்தரு, காமதேனு எல்லாம் மற்றொருவனுக்குச் சொந்தமாகிவிடும்.

தேவேந்திரனுக்குக் கவலை அதிகரித்தது. சுக்கிரனின் தவத்தைக் கெடுத்தால்தான், தனது கூட்டமும், தனது பதவியும் காப்பாற்றப்படும் என்பதை அவன் உணர்ந்தான். தனது அரசவையிலுள்ள தேவர்களைக் கூப்

பிட்டு யோசனைகள் கேட்டான். அவர்கள் கண்ணிமைக்காமல், கால்படாமல், வாய் வலிக்காமல் பேசினார்களேயொழிய சுக்கிரனின் தவத்தை அடக்கும் விதத்தையும், அதை எதிர்த்துத் தேவர்கள் செய்யவேண்டியதையும்—உருவான யோசனைகளைச் சொல்லவில்லை. தேவர்களின் யோசனைகள் பலனளிக்காது என்றதும், தேவமாதர்களின் உதவியை இந்திரன் நாடினான்.

"ஒரு நொடியில் வென்றுவருகிறேன் அந்த உலுந்தனை!" என்று ஊர்வசி கிளம்பினாள். சுக்கிரன் தவஞ்செய்யும் இடத்தை அடைந்தாள். அவர் கண்ணில் படும்படி உலவினாள்; பின் எதிரில் நின்று கால் சதங்கை கொஞ்ச ஆடினாள்; பின் மார்பகம் மிஞ்ச, அங்க அழகுகள் அனைத்தும் காண்போர் நெஞ்சைக் கலக்கிட, தவஞ்செய்பவர் அருகே சென்று ஆடினாள். சுக்கிரனின் மனம் எதிலும் மயங்கவில்லை. தவம் கலையாது இருந்தது; ஊர்வசி தோற்றுத் திரும்பிவந்தாள்.

திலோத்தமை சென்றாள். ஆடினாள், பாடினாள். சுக்கிரனின் தவம் தடைப்படவில்லை.

ரம்பை சென்றாள். அவளுடைய அழகும் சுக்கிரனின் தவத்தைக் கெடுக்கவில்லை.

கடைசியாக விசுவாமித்திரனின் தவத்தைக் கெடுத்து, விருதுபெற்ற மேனகை சென்றாள். அவளாலும் முடியவில்லை, சுக்கிரனின் தவத்தைக் கெடுப்பதற்கு.

தெய்வமாதர்களாலும் முடியவில்லை. இந்திரன் தன் படைவரிசையில் வைத்திருந்த பலம்பொருந்திய—எதிரிகளை மயக்கி மண்டியிடச்செய்யும் மாதர்படை இப்பொழுது தோற்றோடி வந்துவிட்டது. ரிஷி சிரேஷ்டர்கள், புற்று மூடிய முனிவர்கள், புனலிலும் கனலிலும் கலங்காது தவமியற்றும் யோகிகள், இவர்களெல்லாம் மங்கையரின் உடலழகில் மயங்கியிருக்கின்றனர். ஆனால் சுக்கிரன் அப்படி மயங்கிப்போகாமல், தவத்தைக் காத்தபடி இருந்தார். மாமுனிவர்களை மயக்குவதில் சப்த ரிஷிகளையும் தமது சாகசத்தால் அடிமையாக்குவதில் தெய்வமாதர்கள் தேர்ச்சிபெற்றவர்கள். ஆனால் அவர்களால் முடியவில்லையென்றால், அவர்களைவிட அழகிலும், சாகசத்திலும் சிறந்தவர்களை வேறு எங்கு கண்டுபிடிக்க முடியும்? இந்திரன் யோசித்தபடி இருந்தான். எவ்வளவுதான் யோசித்தாலும் சுக்கிரனை மயக்கவல்ல சுந்தரவல்லி கிடைக்கவில்லை.

சுக்கிரன் செய்யும் தவம் முற்றி, வெற்றியடையும் கட்டத்தை யடைந்தது. அசுரர் கை ஓங்கி, தேவர் கூட்டம் தோல்வியுறவும், தனது பதவி இழக்கவுமான நிலை வந்துவிட்டதென இந்திரன் கலங்கினான்.

ஒரு நாள் கவலை தோய்ந்த முகத்துடன், இந்திரன் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தான். முன்போன்று, அணி, மணி, ஆடம்பரங்கள் எதுவும் கிடையாது. அரண்மனையிலும் ஆடல் பாடல்கள் நின்றுவிட்டன. இந்திரனுடைய பதவி போய்விடுவது நிச்சயம் என்ற நிலை வந்துவிட்டது. செய்வதறியாது திகைத்து இந்திரன் உட்கார்ந்திருந்தான்.

தோட்டத்தில், இந்திரனுடைய மகள் சயந்தி, தன் தோழிகளுடன் ஓடி விளையாடிக் கொண்டிருந்தாள். சோகத்துடன் அமர்ந்திருக்கும் தந்தையைப் பார்த்தது, சயந்தி ஆட்டத்தை நிறுத்திவிட்டு வந்தாள்.

"ஏனப்பா, இப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை, நீ போய் விளையாடு!"

"என்ன ஆபத்து வந்துவிட்டது, ஏன் எல்லோரும் பேசாமல், நிலைகலங்கி இருக்கிறீர்கள்?"

"உனக்குச் சொன்னால் புரியாது. என்னைத் தொந்தரவு செய்யாதே. போய் விளையாடு?" என்று இந்திரன் சொன்னான். சயந்தி தன் தோழிகளைத் தேடி ஓடினாள்.

ஓடுகின்ற சயந்தியைப் பார்த்ததும், இந்திரனின் சோகம், அதிகமானது. தனது பதவி நீடித்திருக்குமானால், அவளுடைய அழகுக்கு மூவர்களே போட்டியிட்டு வந்திருப்பார்கள். தெய்வலோகத்து இளவரசி இப்பொழுது, அதனால் அவளுடைய அழகு ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது. இந்திரபதவி தன்னைவிட்டுப் போய்விட்டால், இளவரசி பட்டம் அகன்றுவிடும். பின் கவனிப்பார் யாருமிருக்காது.

அழகு மங்கை! திடீரென இந்திரனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

சயந்தி போற்றத்தக்க அழகுடையவள்—புதுப்பருவம்—இதுவரைத் தீண்டப்படாத மணமலர்!

சுக்கிரனை வசப்படுத்த, அவனுடைய தவத்தைக் கெடுக்க, சயந்தியை அனுப்பினால் என்ன? இந்திரன் யோசித்தான்.

(தொடரும்)

அடிமை வாணிபம்

ஒரு மனிதன் தன் உரிமைகளை யிழந்து அதிகாரங்கொண்ட மற்றொரு மனிதனுக்கு காலமெல்லாம் பணிசெய்து வாழவேண்டும் என்ற அடிமை முறை பழங்காலத்திலிருந்தே தோன்றியிருக்கிறது. இந்த அடிமை முறையைப் போற்றி வளர்த்ததில் பண்டைய உரோம, கிரேக்க நாடுகள் மேம்பட்டு விளங்கின. பிற நாட்டினர்மீது போர்தொடுக்குங் காலத்து, போரில் தோற்ற வீரர்களை, வெற்றி வீரர்கள் சிறைப்படுத்தித் தம் நாட்டிற்குக் கொணர்ந்து அடிமைகளாக விற்றனர். அரண்மனைவாசிகளும், உல்லாசபுரிச் சீமான்களும் இந்த அடிமைகளை விலைகொடுத்து வாங்கி, ஏவல்காத்து நிற்கும் பணியாட்களாக நியமித்தனர். கழனிகளைத் திருத்தி உழவுத்தொழில் புரியவும் அடிமைகள் பயன்பட்டதால் அடிமைகள் அதிகமாகத் தேவைப்பட்டனர். அடிமைகளை வைத்து விற்கும் வாணிபமும் வளரத்தொடங்கியது.ஏதன்சும், ரோமாபுரியும் அடிமை வாணிபத்தில் சிறந்து விளங்கிய நகரங்களாகும். அடிமைகளை விற்க தனியிடங்கள் உண்டாக்கப் பட்டன. அங்கு அடிமைகள் காட்சிப்பொருள்கள்போல் நிறுத்திவைக்கப்பட்டனர். மக்கள் அங்கு வந்து தமக்குப் பிடித்த அடிமைகளை விலைகூறிப் பெற்றுச் செல்வர். சிரியா, லிபியா, கலாட்டியா, திரேஸ், எகிப்து, எத்தியோப்பியா முதலிய நாடுகளிலிருந்து மனிதர்கள் அடிமைகளாக கொண்டுவரப்பட்டு விற்கப்பட்டனர்.

அரசாங்கமும் ‘அடிமைவரி’ என்ற வரி விதித்து அடிமை வாணிபம் நடத்தும் வணிகர்களிடமிருந்து பொருள் பெற்றுவந்ததால் அடிமை வாணிபம் எவ்வித தடையுமில்லாமல் வளர்ந்துவந்தது. மன்னர்களே அடிமை வாணிபம் நடத்திப் பொருள் சேர்த்தனர் என்று தெரிகிறது. மாவீரனான சீசர் ஒரு முறை 63,000 போர்க்கைதிகளை கால் நாட்டில் விற்றதாக வரலாறு கூறுகிறது. கிளாடியஸ் என்ற மன்னன் காலத்தில் ரோம் நாட்டில் இருந்த அடிமைகள் சுமார் 2,08,32,000 பேருக்குமேல் என்று தெரிகிறது.

கிரேக்க நாட்டைவிட ரோமாபுரிதான் அடிமை வாணிபத்தில் சிறந்து விளங்கியது. ரோம் நாட்டு மன்னர்கள் வெற்றி வீரர்களாக பவனி வந்த நேரத்தில் எண்ணற்ற எதிரிகள் அடிமைகளாக மாற்றப்பட்டு ரோமாபுரி நோக்கி இழுத்துச் செல்லப்பட்டனர். நல்ல உபயோகமான பொருள் எவ்வளவு அதிகமாக விற்பனைக்கு வந்தாலும் அந்த வாணிபத்தில் வளர்ச்சி குறையாது. அதுபோல அடிமை வாணிபமும் குறையாது, அடிமைகளின் தொகை ரோமாபுரியிலும், சுற்றுப்புறத்திலும் அதிகரித்து வந்தது.

ஆனால் ரோம் சாம்ராஜ்யம் நெடுநாள் நிலைக்கவில்லை. பிற்பட்டு தோன்றிய ரோம் வீரர்களின் ஒற்றுமையின்மையால் சாம்ராஜ்யம் சரிந்தது. போர்கள் இல்லாததால் அடிமைகளின் இறக்குமதி குறையத்தொடங்கியது, இதனால், வெளிநாட்டு அடிமை வாணிபம் குறைந்து, உள்நாட்டு வாணிபமும் குறைய ஆரம்பித்தது.

இதற்கிடையில் கிருஸ்தவநெறி பரவ ஆரம்பித்து அடிமை முறை ஒழியவேண்டும் என்ற எண்ணம் வளரத் தொடங்கியது மன்னர்களும் நாட்டின் நலன் கருதி அடிமை வாணிபத்தை தடுத்து அடிமை முறையையும் ஒழிக்க முன்வந்தனர். கிருஸ்தவ மதம் ஐரோப்பா எங்ஙனும் பரவி நல்ல ஆதிக்கம் பெற்றதால் எல்லா நாடுகளிலும் அடிமை முறை நீக்கப்பட்டது.

இப்படியாக மனிதனுக்கு மனிதன் அடிமை இல்லை என்ற புதிய தத்துவம் போதிக்கப்பட்டு அடிமை முறை ஒழிக்கப்பட்டபோதிலும் மறுபடியும் அது பதினைந்தாம் நூற்றாண்டில் தலைகாட்டியது. எந்த கிருஸ்தவமதம் அடிமை நீங்க எழுந்ததாக விளங்கியதோ அந்த மதத்தையே பின்பற்றிப் போற்றிவளர்த்த ஐரோப்பிய நாடுகள் மறுபடியும் அடிமை வாணிபத்தில் ஈடுபட்டன.

பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் இருண்ட கண்டமாயிருந்த ஆப்பிரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதோடு அங்கு தங்கம் போன்ற கனிப்பொருள்கள் கிடைக்கின்றன என்று தெரியவந்தது. இதன்பேரில் ஐரோப்பிய நாட்டினர் ஆப்பிரிக்காவில் குடியேறிக் கோட்டைகள் கட்டினர்.ஆப்பிரிக்காவில் நீக்ரோ இனத்தவர் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்துவந்தனர். கடற்கரையோரம் குடியேறிய ஸ்பெயின் நாட்டினர் பல நீக்ரோக்களைப் பிடித்து தாய்நாட்டிற்கு அடிமைகளாக அனுப்பினர்.

இதற்கிடையில் கொலம்பஸின் அமெரிக்கா கண்டுபிடிப்பு பல ஐரோப்பிய நாட்டினரை அமெரிக்காவுக்கு கொண்டுசேர்த்தது. அங்கு வாழ்ந்த சிகப்பு இந்தியர்கள் வலுவற்றவர்களாகவும் உபயோகமற்றவர்களாகவும் தென்பட்டதால், அங்குள்ள கனிப்பொருள்களை எடுக்கவும், பருத்தி, புகையிலைத் தோட்டங்களை உண்டாக்கவும் வலுப்பெற்ற நீக்ரோ இனத்தவரே தகுதியாவர் என்று ஐரோப்பியர் எண்ணினர்.

அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியருக்கு ஆப்ரிக்காவிலிருந்து ஏற்றிவரப்பட்ட நீக்ரோவர் விற்கப்பட்டனர். **சார்லஸ்** என்ற ஸ்பெயின் நாட்டு மன்னன், ஆண்டுதோறும், **ஹட்டி, கியூபா, ஜமைய்க்கா, போர்டோரிகோ** முதலிய குடியேற்ற நாடுகளுக்கு, 4000 நீக்ரோவரை கொடுக்கும்படியான ஒரு வாணிப உரிமையை வழங்கினன். இதுதான் ஆப்ரிக்கா—அமெரிக்க அடிமை வாணிபத்தின் ஆரம்பமாகும்.

இந்த வாணிபம் பல கூட்டுக்குழு(கம்பெனி)க்களால் நடத்தப்பெற்றுவந்தது. ஆங்கிலேயரும் இதில் தலையிடாமல் இல்லை. **ஜான் ஹாக்கின்ஸ்** என்ற ஆங்கிலேயப் பெருமகனர் அடிமை வாணிபத்தில் ஈடுபட்டு ஸ்பானிஷ் குடியேற்ற நாடுகளுக்கு அடிமைகள் வழங்கும் பொறுப்பை ஏற்று மிகுந்த ஊதியம் பெற்ருர். கி. பி. 1620-ல் ஹாலந்து கப்பலொன்று ஆப்ரிக்காவின் **கினியா** கடற்கரையிலிருந்து நீக்ரோவரை ஏறிக்கொண்டு அமெரிக்கா சென்று, அங்கு ஆங்கிலேயருக்குச் சொந்தமாக இருந்த வர்ஜீனியா பகுதியிலுள்ள ஜேம்ஸ்டவுனில் புகையிலைத் தோட்டங்களுக்காக நீக்ரோவரை விற்றது. இதுதான் ஆங்கில—அமெரிக்காவின் அடிமைமுறையின் ஆரம்பமாகும். 1790-ல் வர்ஜீனியா மாநிலத்தில் 2,00,000 நீக்ரோவருக்குமேல் இருந்தனர். ஆண்டுக்கு 4,800 பேர் வீதம் 1713 முதல் 30 ஆண்டுகளுக்கு ஸ்பானிஷ் குடியேற்ற நாடுகளுக்கு அடிமைகளை வழங்கும் உரிமையையும் ஆங்கிலேயக் கூட்டுக்குழுவொன்று பெற்றது.

ஆப்ரிக்காவிலிருந்து வெளியேற்றப்படும் நீக்ரோவர் தொகை அதிகரித்துக்கொண்டே வந்தது. 1680—1700 ஆண்டுகளுக்கு இடையில் 3,00,000 பேர் ஆப்ரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டனர். 1700—1786-ம் ஆண்டுவரை, ஜமைக்கா பகுதிக்கு மட்டும் 6,10,000 பேர் ஏற்றுமதி செய்யப்பட்டனர். ஆங்கிலேய பகுதிகளில் மட்டும் 1680—1786-ம் ஆண்டுவரை இறக்குமதி செய்யப்பட்ட நீக்ரோவர் தொகை 21,30,000 பேர்களாகும்.

இங்கிலாந்தில் **லிவர்பூல், லண்டன், பிரிஸ்டல் லங்காஸ்டர்** ஆகிய துறைமுகங்களிலிருந்து புறப்பட்ட அடிமை வாணிபக் கப்பல்கள் 192 ஆகும். இங்கிலாந்து மட்டுமல்லாமல் பல ஐரோப்பிய நாடுகளும் இந்த வாணிபத்தை போற்றி வளர்த்திருக்கிறது. 1790-ல் ஆப்ரிக்காவிலிருந்து வெளியேற்ற நீக்ரோவர் மொத்தம் 74,000 பேரில், ஆங்கிலேயர் கொண்ட பங்கு 38,000, பிரான்சு 20,000, போர்த்துக்கல் 10,000, ஹாலந்து 4,000, டென்மார்க்கு 2,000, ஆகும்.

இப்படி லட்சக்கணக்கணக்கில் ஏற்றுமதியாகும் இந்த விற்பனைப்பொருள்கள் எப்படிக் கிடைத்தன என்று எண்ணத்தோன்றும்.

துப்பாக்கி, பீரங்கி முதலிய ஆயுதங்களைக் கொண்ட கப்பல்களில் வந்திறங்கிய ஐரோப்பியர் முன் ஆப்ரிக்காவில் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த நீக்ரோவர் எதிர்த்து நிற்கும் திறன் பெறவில்லை. மேலும் சில நீக்ரோத் தலைவர்களே ஆட்களை பிடித்துத்தரும் வேலைக்கு வந்தனர். இதற்கு பதிலாக அவர்கள் ஐரோப்பிய பொருள்களைப் பெற்றனர். இவர்கள் பல விதங்களாக நீக்ரோ மக்களைப் பிடித்தனர். அவைகளில் சில மிகக் கொடுமையாகவே இருந்தது. ஆள் பிடிக்கும் விதத்தில் முக்கியமானது ஊரை இரவில் கொளுத்துவதாகும். நெருப்பினின்று தப்பி வெளியேறும் மக்களைப் பிடித்துச்சென்றுவிடுவர். இதனல் காணுதவரை தீயில் இறந்துபட்டதாக எண்ணிவிடுவர் ஏமாந்த நீக்ரோ மக்கள். இதைப்போல் பல வித கொடுமைகள் புரிந்தே அடிமை வாணிபம் சிறப்பாக நடத்தப்பட்டது ஐரோப்பிய மக்களால்.

அடிமை வாணிபத்தின் கொடுமையை உணர்ந்து அதைக் கண்டிக்கத் தலைப்பட்டனர் நல்லறிவாளர்கள் சிலர். இங்கிலாந்தில் வாழ்ந்த, **பாக்ஸ்டர், ரிச்சர்ட் ஸ்டீல், சதர்ன், போப், கூப்பர், டயர், ஜான் வெஸ்லி, ஒயிட்பில்ட், ஆதாம் ஸ்மித், மில்லர், ராபர்ட்சன், டாக்டர் ஜான்சன்** ஆகியோர் அடிமை வாணிபத்தைக் கண்டித்து கருத்துக்கள் வழங்கினர்.

1776-ல் இங்கிலாந்து மக்கள் சபையில் டேவிட் ஹார்ட்லி என்பவர், “மனித உரிமைக்கும் கடவுள் கொள்கைக்கும் புறம்பான” அடிமை வாணிபத்தை ஒழிக்கவேண்டும் என்று வாதாடினர்; ஆனல் வெற்றி கிட்டவில்லை. 1783-ல் ஜார்ஜ் பாக்ஸ் என்பவரின் தலைமையில் எதிர்ப்பாளர்கள் ஒன்றுகூடி மக்களுக்கு அடிமை வாணிபத்தின் தீமையை

விளக்கினர். வில்பர் போர்ஸ் என்ற பாராளு மன்ற உறுப்பினர் அடிமை வாணிப முறையை ஒழிக்க பலவாறு முயற்சிகள் எடுத்தார். ஆனல் பாராளுமன்றத்தில் தோல்வியே ஏற்பட்டுவந்தது, கடைசியாக 1806-ல் அதி காரத்தில் அமர்ந்த கிரென்வில் பிரபுவும் பாக்சும் அடிமை வாணிப ஒழிப்பை ஆதரித்த தால், மக்கள்சபையும், பிரபுக்கள் சபையும் ஆதரவு தந்தது. 1807-ல் அடிமை வாணிப ஒழிப்புச் சட்டம் அரசரின் கையெழுத்தையும் பெற்றது. இதன்படி 1807-ம் ஆண்டு மே மாதம் 1-ம் தேதி முதல் எந்தக் கப்பலும் அடிமைகளை ஏற்றிவரும் விதத்தில் ஆங்கி லேய ஆட்சிக்குட்பட்ட இடத்தில் மிதக்கக் கூடாது என்று ஏற்பட்டது. எந்த குடியேற்ற நாடுகளிலும் புதிதாக அடிமைகள் இறங்கக் கூடாது என்றும் ஏற்பட்டது. இவ்விதமாக இங்கிலாந்து அடிமை வாணிப முறையை ஒழிக்க முன்வந்தது.

அடிமை வாணிப முறையை முதலாவதாக ஒழித்த நாடு டென்மார்க்தான். 1802 முதல் டென்மார்க்குக்குச் சொந்தமான நாடுகளில் அடிமை வாணிபம் நடைபெறக்கூடாது என்ற மன்னரின் உத்தரவு பிறந்தது.

இதன் பின் எல்லா நாடுகளிலுமே அடிமை வாணிப ஒழிப்புச் சட்டங்கள் இயற்றப்பட் டன. 1808 முதல் அமெரிக்காவிலும், 1813 முதல் ஸ்வீடனிலும்; 1814 முதல் ஹாலந்தி லும், 1820 முதல் ஸ்பெயினிலும், 1825-ல் பிரான்சிலும், அடிமை வாணிபம் ஒழிக்கப்பட வேண்டியதென ஒப்புக்கொள்ளப்பட்டு அதற் கான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

என்ருலும் சட்டத்தை மீறி வாணிபத்தை நடத்த முயற்சித்தனர். இதற்காக இங்கி லாந்து 1833-ல் பிரான்சுடன் ஒரு உடன் படிக்கை செய்துகொண்டு அதன்படி இரு நாடுகளும் சில பகுதிகளிலே வேவுபார்த்து அடிமை வாணிபக் கப்பல்களை பிடிக்கும் உரிமையைப் பெற்றன. 1842-ல் ஏற்பட்ட ஆங்கிலோ-அமெரிக்க உடன்பாட்டின்படி இரு நாடுகளும் சேர்ந்து ஆப்ரிக்க கடற்கரையோரங் களில் நடைபெறும் அடிமை வாணிப முயற்சி யைத் தவிர்க்கும் பணியினை ஏற்றுக்கொண் டன.

இவ்வாறு பலநாடுகளுக்கிடையே நடை பெற்றுவந்த அடிமை வாணிபம் ஒழிந்துவிட் டாலும் வட அமெரிக்காவிலும் தென் அமெ ரிக்காவிலும் உள்நாட்டு வாணிபம் மறைமுக மாக நடைபெற்றுக்கொண்டுதான் இருந்தன. அடிமை முறையை அறவே நீக்கினலன்றி இக்குறையைத் தீர்க்க இயலாது என்பது தெரிந்தது. ஆனல் அமெரிக்க நாடுகள் அடிமை முறையை ஒழிக்க முன்வரவில்லை.

சென்ற நூற்ருண்டின் ஆரம்பத்தில் எல்லா நாடுகளும் அடிமை வாணிபத்தை ஒழிக்க முன்வந்தது அவரவர்களது மனிதாபிமானத் தைக்காட்டி நிற்கும் ஒரு செயலாகக் கருதமுடி யாது. ஏனெனில் அடிமை வாணிபம் ஒழிக்கப் படாவிட்டால் அடிமைகளாக குடியேறிவந்த நீக்ரோ மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்து ஐரோபியரின் தொகையை மிஞ்சிவிடும் என்ற எண்ணம் பல நாடுகளுக் குத் தோன்றியது. அடிமைகள் அதிகரித் தால், உரிமைகோரிப் புரட்சிசெய்வார்களோ என்று அஞ்சினர் அவர்களை ஆட்டிப்படைத்த ஐரோப்பியர். இதற்கு எடுத்துக்காட்டாக ஹட்டி என்ற பிரெஞ்சுக்காரருக்குச் சொந்த மான தீவில் அதிகமாகக் குடியேறி இருந்த நீக்ரோவர் பிரான்சு தேசத்தில் புரட்சியெழுந்த போது இங்கேயும் கிளர்ச்சிகள் செய்ததன் முடிவாக, ஹட்டி ஒரு சுதந்திரம்பெற்ற நாடாக மாறியது பிரெஞ்சு சர்க்காரும் வேறுவகை யறியாது அதன் சுதந்திரத்தை ஒப்புக் கொள்ள நேரிட்டது.

ஆகவே அடிமை வாணிபம் ஒழிக்கப்பட்டது இன்றியமையாத ஒரு சூழ்நிலையால் ஏற்பட் டதேயாகும். அப்பொழுது அது ஒழிக்கப் படாமல் இருந்திருந்தால் ஹட்டி மக்கள் கிளப்பிய புரட்சித்தீ அமெரிக்கா எங்கனும் பரவியிருக்கும், இன்றுள்ள உலக நாடுகளின் தொடர்பும் வேறுவிதமாக அமைந்திருக்கும். போருக்குப்பின் பணிவதைவிடப் போருக்கு முன் தோழமைகொள்வதே மேல் என்னும்படி தான் ஐரோப்பிய நாடுகள் அடிமை வாணிப ஒழிப்புக்கு இசைய முன்வந்தன.

கி. பி. 15-ம் நூற்ருண்டிலிருந்து 19-ம் நூற் ருண்டுவரை, நான்கு நூற்ருண்டுகளில் ஐரோப்பியர் நடத்திய வெறிச்செயல் ஒழிந்து விட்டாலும், இன்றுவரை மனிதனை மனிதன் அன்புகொண்டு போற்றிடும் அளவுக்கு உலக நாடுகளின் தொடர்பு அமையவில்லை. அது அமையும்போதுதான் அடிமை வாணிபம் முற் றிலும் அகன்றுவிட்டதாகப் பொருள்கொள்ள முடியும்.

[அடிமை வாணிபம் வளர்ந்த தன்மையும், அது அழிந்த விதமும் இக்கட்டுரையில் கூறப்பட்டிருக் கிறது. அடுத்த இதழில், உரிமைகளிழந்து துன் பத்திலுழன்ற அடிமைகளைப்பற்றியும், உரிமைகோரி அவர்கள் செய்த புரட்சிகள்பற்றியும், கூறும் வகை யில் ஒரு கட்டுரை வெளியாகும்.]

சிறுகதை

மகானின் மகிமை

[இரா செழியன்]

எனது கிராமமான சின்னமங்கலத்தின் பெயர் திடீரென்று பத்திரிக்கைகளில் அடிபட ஆரம்பித்தது. "உன்னுடைய ஊர் எது?" என்று கேட்டால் "தஞ்சாவூர் ஜில்லா, மாயவரம் பக்கம்" என்று சொல்லித் தப்பித்துக் கொள்வேன். விளக்கமாகச் சொல்லவேண்டுமானுல், மாயவரத்திற்கு மூன்று ஸ்டேஷன்கள் தள்ளி இறங்கி, வயல் வரப்பில் எட்டுமைல் நடந்துபோனுல் எங்கள் ஊரையடையலாம் என்று சொல்லவேண்டியிருக்கும். அந்தக் கிராமத்தில் இரண்டு தெருக்கள்தாம். மொத்தம் பதினெட்டு வீடுகள்—மூன்று ஓட்டுவீடுகள், மிகுந்தவை கூரைவேய்ந்தவை. வாரத்திற்கு இரண்டுமுறை தபால்காரன் வந்து போவான். அவனுக்குக்கூட வேலேயிருக்காது. அவ்வளவு சிறிய கிராமமாக இருந்த சின்னமங்கலம், திடீரென்று சென்னே செய்தித்தாள்களின் தலைப்பைப் பிடிக்க ஆரம்பித்தது. என்னுடன் வேலேபார்ப்பவர் பத்திரிகைத் தலைப்பைக் காட்டினர்.

சின்னமங்கலத்தில் ஒரு அதிசயம்!

குளத்தில் மாயமாக மறைந்த சாமியார்

மாயவரம், ஜன 7—

மாயவரத்திற்குப் பக்கத்திலுள்ள சின்னமங்கலம் என்ற கிராமத்தில், ஒரு குளத்தில், கடவுளைத் தியானித்துக்கொண்டு முழுகிய சாமியார் மாயமாக மறைந்துவிட்டார். அவர் முழுகுவதைப் பார்த்தவர்கள், பின் குளத்தில் இறங்கி எவ்வளவு தேடியும் உடல் அகப்படவில்லே. இது மிக அதிசயமாக இருக்கிறது."

அதற்கு இரண்டுநாள் கழித்து இன்னும் விளக்கமாகச் செய்திவந்தது.

கலியுக விந்தை

ஜோதியில் மறைந்த சாமியார்

மாயவரம், ஜன 10—

கலியுக அதிசயங்களில் ஒன்று சின்னமங்கலம் என்ற கிராமத்தில் நடைபெற்றிருக்கிறது. இதை நேரில் கண்டறிந்து வர, நமது விசேஷ நிருபர் சென்றிருந்தார். அவர் கிராம முக்கியஸ்தர்களே நேரில் சந்தித்து, முக்கிய தகவல்களைச் சேகரித்துள்ளார்.

ஜனவரி 5-ந் தேதி காலே 8 மணி சுமாருக்கு கிராம நாட்டாண்மைக்காரரான நல்லசாமி குளத்தின் பக்கம் வந்தார். அப்பொழுது, எதிர்ப்பக்கத்துக்குக் கரையிலிருந்து சாமியார் ஒருவர் குளத்தில் குதிப்பதைப் பார்த்தார். நெடுநேரமாக அவர் எழுந்திருக்காததைப் பார்த்த அவர், பக்கத்திலிருக்கும் வயல்களில் வேலே செய்யும் ஆட்களையெல்லாம்கூப்பிட்டுத் தேடச்சொன்னுர். சுமார் நாற்பது அல்லது ஐம்பதுகுடியானவர்கள் அந்தச்சிறு குளத்தை அலசிவிட்டனர். சந்தேகம் தீர்வதற்காக, மறுநாள் இன்னும் அதிகமான ஆட்களுடன் வந்து—பக்கத்துக் கிராமத்திலிருப்பவர்களேயும் சேர்த்துக்கொண்டு, குளத்துத் தண்ணீரையெல்லாம் இரைத்தார்கள். அப்பொழுதும் சாமியாரின் சவம் கிடைக்கவில்லே.

சாமியார் குளத்தில் அமிழ்ந்த நேரத்தில், கண்ணேக்கூசும் வெளிச்சம் தோன்றியதாகக் கிராமத்தில் சிலர் சொல்லுகிருர்கள். கிராமத்துக் கோவிலில் இருக்கும் மணி தானுக அடித்துக்கொண்டதாகவும், விக்கிரகத்தின் பக்கத்திலிருந்த விளக்கு அணேந்து, பூஜாபாத்திரத்திலிருந்த தண்ணீர் கவிழ்ந்துகொண்டதாகவும், கோயில் குருக்கள் சொல்லுகிருர்.

இவைகளிலிருந்து, குளத்தில் அமிழ்ந்து மாயமாக மறைந்துபோனவர் ஒரு மகான் என்று தெரிகிறது. அந்தக் குளத்தைப் பார்த்துப்போக, மக்கள் கூட்டங் கூட்டமாக வந்து போகிருர்கள்."

ஒரு வாரத்துக்கெல்லாம், மீண்டும் சின்னமங்கலம் அதிசயத்தைப்பற்றி செய்தி வந்தது. இறந்துபோன சாமியார் பெயர் அகோரமூர்த்தி யென்றும், அவர் பன்னிரண்டு வருஷம் தவஞ்செய்தவரென்றும், பின் திருவானேக்காவலில் அவரும், அவருடைய சீடரான சித்த மூர்த்தியும் தங்கியிருக்கும்பொழுது, ஒருநாள் சிவபெருமான் மகான் கனவில்

தோன்றி, கிழக்கே, காவிரிதீரத்தில், இன்ன நாள் இன்ன நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் உனக்கு முக்தி கொடுப்பதாகச் சொல்லி மறைந்ததாகவும், அதனபடி வந்த மகான் அகோரமூர்த்தி சாமியார் சின்னமங்கலம் கிராமத்தில் முக்தியடைந்ததாகவும் கூறப்பட்டது. பஞ்சபூதங்களில் ஒன்றான அப்பு அதாவது தண்ணீருக்கு ஸ்தலமாக விளங்குவது திருவானைக்காவல். ஆதலால், திருவானைக்காவல் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் முக்தி வரந் தந்ததால், சாமியார் தண்ணீரில் இறங்கி முக்தியடைந்ததாகவும் கூறப்பட்டது. குரு முக்தியடைந்ததும், திருவானைக்காவலிலிருந்து அவருடைய சீடன் சித்தமூர்த்தி சின்னமங்கலம் வந்து குளக்கரையில் ஒரு மடங் கட்ட ஆரம்பித்துவிட்டார். "திருக்கைலாய மலையருகில் சாமியாருடைய சீடன் நான்!" "திருவண்ணாமலைக் குகையில் சாமியாருடைய உபதேசங்களை நான் கேட்டேன்!" "எனக்கிருந்த செவிட்டுத் தன்மையை, அகோரமூர்த்தி சாமியார் ஓங்கார மந்திரத்தை உச்சரித்துப் போக்கிவிட்டார்!" என்று பலர் கூறிக்கொண்டு மடத்தில் வந்து இடம் பெற்று விட்டனர்.

சாமியார் விழுந்து மறைந்த குளம் பிரபல்யமடைந்தது. அதிலிருக்கும் தீர்த்தத்தை எடுத்துத் தெளித்துக்கொண்டால், தீராத வினையெல்லாம் தீர்ந்துவிடுமென்று நாள்தோறும் மக்கள் அங்கு சென்றவண்ணமிருந்தனர். ஒரு ஆண்டுக்குள், புதிய கண்டுபிடிப்புகளான பெனிசிலின், செப்ட்ரோமிசின் இவைகளைத் தோற்கடிக்குமளவுக்கு, சின்னமங்கலம் தீர்த்தம் பிரசித்திபெற்றது. மடத்திலிருப்பவர்கள் சிறு புட்டிகளில் அடைத்து, விற்று வந்தார்கள்.

ஓராண்டு முடிவில், குளத்துக்கு படிக்கட்டுகள், சுற்றிலும் கைப்பிடிச் சுவர் கட்டப்பட்டது. அகோரமூர்த்தி மடாலயத்தில் நூறு சாமியார்களுக்குமேல் இருந்தனர். மடாலயத்துக்குத் தானங்கள், காணிக்கைகள் முதலியன குவிந்தன. மடாலயத்தின் புதிய கட்டிடத்தைத் திறந்துவைக்க கவர்னர் அவர்கள் வந்திருந்தாராம். எதிரேயிருக்கும் புனித குளம் புனருத்தாரணம் செய்யப்பட்டபின், மாஜி மந்திரி அப்பளாச்சாரியார் வந்து, சாஸ்திரங்களின் பெருமை பற்றியும், மகான்களின் மகிமைபற்றியும் பேசினர்.

மகான் அகோர மூர்த்தி முக்தியடைந்த நாள், ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டது. மகான் முக்தியடைந்த நேரம் வரும்பொழுது, குளத்தில் ஒரு ஜோதியுண்டாகிறதாம். அதே சமயத்தில், கோயிலில் இருக்கும் விளக்கு அணைந்துவிடுமாம், மணி தன்னால் அசைந்து, மணியோசை கிளம்புகிறதாம். இந்த அதிசயங்களை, அங்கு சென்றவர்கள் நேரில் பார்த்ததாகக் கூறினர்கள்.

மகான் அகோர மூர்த்தியின் பெருமையும் தீர்த்தத்தின் மகிமையும் உயர்ந்துகொண்டே போனது. இதில் என்போன்ற அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பெருமைப்பட்டது, எங்கள் கிராமப்பெயர் சின்னமங்கலம் இப்பொழுது சின்னதாக இல்லை. பலரால் தெரிந்து வைக்கப்பட்டிருந்தது. முன்போல, இன்ன ஜில்லா இன்ன ஊர்ப்பக்கம் என்று சொல்ல வேண்டியதில்லை. தைரியமாக, "சின்னமங்கலம்!" என்று சொல்லிக்கொள்ளலாம். சின்னமங்கலத்தின் பெயர் புகழ்பெற்றதைப் பார்த்தால் இந்த ஊர்ப்பக்கம் என்று நாங்கள் சொல்லிக்கொண்டிருந்ததுபோய், எங்கள் கிராமத்தின் பக்கத்தில் உள்ளவர்கள், "சின்னமங்கலத்தின் பக்கத்தில் எங்கள் ஊர்!" என்ற நிலை வந்தது.

முதலில் குறிப்பிட்ட அதிசயம் நிகழ்ந்து ஐந்து ஆண்டுகள் கழித்துதான் நான் அந்த ஊருக்குப் போகவேண்டிய சந்தர்ப்பம் வந்தது. அங்கு ஏற்பட்டுள்ள மாறுதல்களின் அளவு ஸ்டேஷனில் இறங்கியதுமே எனக்குத் தெரிந்தது. முன்பெல்லாம், ஸ்டேஷன்மாஸ்டரைத் தவிர இரண்டொருவர் மட்டும் நின்றுகொண்டிருப்பார்கள். இப்பொழுது கூட்டம் ஏராளமாகக் காத்துக்கொண்டிருந்தது, அதிலும் ஸ்டேஷனின் பெயர்ப்பலகைக்குக் கீழ் "சின்னமங்கலம் போக இங்கே இறங்கவும்!" என்று பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருந்தது. அதைவிட, ஸ்டேஷனின் பெயரைச் சின்னமங்கலம் என்று மாற்றியிருக்கலாம். சின்னமங்கலம் போவதற்குக் காத்திருந்த கூட்டம், தரத்திலும், அந்தஸ்திலும் எவ்விதத்திலும் குறைந்தவர்களல்ல. பட்டுப்புடவைகள், வைரக் கம்மல்கள், வெள்ளிப் பூண்போட்ட தடிகள், தோற்பெட்டிகள், ஸ்டேஷனில் பரவிக்கிடந்தன. முன்போல், இருப்புப்பாதை ஓரமாக இரண்டுமைல் நடந்து, பின் வயல் வரப்பில் நடக்கவேண்டிய அவசியம் இப்பொழுது இல்லாமற்போய்விட்டது. சின்னமங்கலத்துக்குப்போகும் மக்களுக்கு உதவியாக ஒரு நல்ல பாதை அமைக்கப்பட்டிருந்தது. ஸ்டேஷனை விட்டு வெளிவந்ததும், ஏராளமான குதிரை வண்டிகள் காத்துக்கொண்டிருந்தன. சில வாடகை மோட்டார்கள், மடாலயத்தைச்

சேர்ந்த கார் ஒன்று, ஓரத்தில் நின்றுகொண்டிருந்தது.

அன்று கிருத்திகை தினமாம். ஆதலால் அன்றெடுக்கும் தீர்த்தத்துக்கு மற்றெல்லா நாளைவிட மகிமை அதிகம் உண்டாம். எனவே கூட்டமும் அதிகமாயிருந்தது.

நான் வெளியில் வந்து சிறிதுநேரம் நின்றுகொண்டிருந்தேன். "சின்னமங்கலம், இன்னும் ஒரு ஆள்! இன்னும் ஒரு ஆள்!" என்று ஒரு வண்டிக்காரன் ஆள் சேர்த்துக்கொண்டிருந்தான். அந்த வண்டியில் ஏறி உட்கார்ந்தேன். என்னைத் தவிர வேறு யாருமில்லை. "என்னப்பா! இன்னும் ஒரு ஆள் என்று கூப்பிட்டாய், இப்பொழுது நான் ஒருவன்தானே இருக்கிறேன்!" என்று கேட்டேன். "பொறுங்க, சாமி! ஒரு நொடியில் புறப்பட்டு விடலாம்!" என்று என்னைச் சமாதானப் படுத்திவிட்டு, "இன்னும் ஒரு ஆள்! இன்னும் ஒரு ஆள்!" என்று சுற்றிவந்து மற்றும் மூன்றுபேர்களைச் சேர்த்துவந்தான். அவர்கள், நாட்டுக்கோட்டை செட்டியார் ஒருவர், அவருடைய மகன், மூன்றாவதாக அவருடைய கணக்கப்பிள்ளை ஒருவன்.

"நீங்க எதற்குப் போகிறீகளாம்!" என்று சிரித்துக்கொண்டு செட்டியார் என்னைக் கேட்டார்.

"என்னுடைய கிராமம் சின்னமங்கலம். அதனால் போகிறேன்!"

"அப்படிங்களா! நம்ம பையன்—இவன் தான் கோயில் படிக்கட்டில் விழுந்து கால் பிசகிட்டுது. அதற்கு சின்னமங்கலம் தீர்த்தம் போடப்போகிறேன்" என்று தான் போகும் காரணத்தைச் சொன்னார்,

"எலும்பு பிசகியதென்றால், நல்ல டாக்டர் யாரிடமாவது காட்டுவதுதானே!" என்று நான் சொன்னேன்.

"டாக்டர் என்ன செய்வான்? சுண்ணாம்பை வைத்துக் கட்டி, காலை வேகவைப்பான். அதிலும் சாதாரண எலும்புப் பிசகா இருந்தால் அப்படிச் செய்யலாம். இது கோயில் படிக்கட்டில் விழுந்து வந்தது. ஏதோ தெய்வக்குத்தம் இருப்பதால் வந்ததாக்கும். தெய்வத் தீர்த்தம் போட்டால்தான் போகும் என்று எங்க சாஸ்திரிகள் சொன்னார்!" என்று செட்டியார் விளக்கம் தந்தார்.

எங்களுக்கு முன்னும் பின்னும் வண்டிகள் பல போய்க்கொண்டிருந்தன. வண்டிகளை யல்லாமல், பாதையின் இருமருங்கிலும் சாரைசாரையாக மக்கள் போய்க்கொண்டிருந்தனர். கூட்டம் அதிகரித்ததும், வழக்கமான மிட்டாய் கடைகள், திருவிழாச் சாமான்கள் வேடிக்கை விளையாட்டுகள் வழிநெடுக இருந்தன, ஆங்காங்கு. காவித்துணியை விரித்துப்போட்டு நிட்டையில் அமர்ந்திருக்கும் சாமியார், மரத்தடியில் ஒற்றைக்காலில் யோகாசனம் செய்து காட்டும் யோகீஸ்வரர், முள்படுக்கையில் அமர்ந்திருக்கும் சித்தர் இப்படிப்பலர் இருந்தனர். முற்றுந்துறந்த இந்த முனிவர்கள் ஒவ்வொருவர் முன் ஒரு துணி விரிக்கப்பட்டிக்கும். வேடிக்கை பார்க்கும் பக்தர்கள் தங்கள் காணிக்கைகளை அதில் போடுவார்கள். காணிக்கை வாங்கும் முனிவர்களுக்குப் போட்டியாகப், பிச்சை கேட்கும் பிச்சைக்காரர்கள் ஏராளம். கால் போனவன், கையொடிந்தவன், ஊமை, குருடு, தொழுநோயாளன் இப்படிப் பிணியைக் காட்டிப் பிச்சைகேட்பவர்கள்—அவர்களும் தம்முன் ஒரு துண்டை விரித்துக் காணிக்கைகளைப் பெற்றனர். மகான் அகோர மூர்த்தியின் படம், அவருடைய மடாலயத்தின் படம், அவர் முக்தியடைந்த குளத்தின் படம் இவைகளெல்லாம் விற்கப்பட்டன. பக்தகோடிகளும், பஜனை கோஷ்டிகளும், காவடி தூக்கிச் செல்பவர்களும், காலட்சேபம் செய்பவர்களும் இப்படிப் பக்திமான்கள் நிறைந்திருந்தனர். ஐந்தாண்டுகளுக்குமுன் கவனிப்பாரற்றுக்கிடந்த இடம், இப்பொழுது நேராகக் கைலாயத்துக்கு அழைத்துச்செல்லும் பாதையாக மாறியது ஆச்சரியப்படத்தக்கதே!

ஊருக்குள் நுழையும் இடத்தில், ஒரு தொழிற்சாலை காணப்பட்டது. அது என்னவென்று வண்டிக்காரனைக் கேட்டேன். தகர டின்கள் தயாரித்துத் தரும் இடம்! தீர்த்தத்தை அடைத்துத்தர தகர டின்கள் தேவைப்பட்டதால், அதையொட்டி, ஒரு சிறு தொழிற்சாலையே உண்டாகிவிட்டது!

ஊர் பெரிதும் மாறிவிட்டது. சிறு வீடுகளும், ஓட்டைக் குடிசைகளும் இருந்தது போய், மாடி வீடுகள் காட்சியளித்தன. கடைசியில் என் சித்தப்பாவின் வீட்டைக் கண்டுபிடித்து—அதுவும் சிறிது மாறுதலடைந்திருந்தது—நான் போய்ச்சேர்ந்தேன். வண்டிக்காரனுக்குக் கூலிகொடுப்பதற்காகப் பக்கத்திலிருந்த மளிகைக் கடையில்—அதுவும் புதிது சில்லரை மாற்றினேன். எனக்குச் சில்லரை கொடுத்த கடை முதலாளி என்னைச் சற்று நேரம் முறைத்துப் பார்த்துவிட்டு இறங்கி வந்தார்.

"என்னைத் தெரியலீங்களா?"

“ யார் நீ ?” என்றேன். ஊரே அடையாளந் தெரியாமல் மாறிப்போயிருந்தது,

“ நான்தான் முனியன்—முனுசாமி ” என்ருன்.

முனியன் எனது சித்தப்பா நிலத்தில் குடியான்த் தொழில் செய்துகொண்டிருந்தான். “ உன்னுடன் வேலைசெய்துகொண்டிருந்த அடைக்கலம் ?” என்று கேட்டேன்.

“ அதோ ! அந்த ஹோட்டல் வைத்திருப்பது அவன்தானுங்க !” என்ருன்.

“ ஊரே மாறியிருக்கிறது !” என்று ஆச்சரியத்துடன் நான் சொன்னேன்.

“ ஆமாம் ! எல்லாம் மகானின் மகிமைங்க !”

இதற்குள் காவடி ஊர்வலம் ஒன்று வந்தது, நான் வீட்டுக்குப் போய்விட்டேன்.

அன்று மாலை முனியன்—இப்பொழுது முனுசாமி வந்தான்.

“ ரொம்ப காலம் கழித்து வந்திருக்கிங்க ! மடத்துக்குப் போகணுமா ? தீர்த்தம் வேணுமா ? வேண்டுமானல் சொல்லுங்க. நான் ஏற்பாடு செய்கிறேன்.”

“ நான் நன்ருகத்தான் இருக்கிறேன். தீர்த்தம் ஒன்றும் வேண்டாம். மகான் குளத்தில் குதித்தார், ஜோதியில் மறைந்தார், தேடிப்பார்த்தால் உடல் கிடைக்கவில்லையென்று சொன்னர்களே ! எல்லாம் உண்மைதான ?”

“ எல்லாம் நடந்ததுதானுங்க. முதல் நாள் ஊர் பூராவும் வந்து குளத்தை அலசிப்பார்த்தார்கள். மறுநாள் தண்ணீரை இறைத்தும் பார்த்தார்கள். உடலே கிடைக்கவில்லை.”

“ ஆச்சரியமாயிருக்கிறதே !”

“ அப்படித்தாங்க. ஆனல்...” என்று முனியன் இழுத்தான். அவன் தயங்குவதிலிருந்து மேற்கொண்டு அவனுக்கு ஏதோ தெரியும் என்பது எனக்குப் புலனயிற்று.

“ ஆனல் என்ன, என்னிடம் சொல் !” என்று நான் வற்புறுத்தினேன்.

“ எனக்கும் அடைக்கலம் இரண்டுபேருக்கும் மட்டும்தான் தெரிந்த இரகசியம் அது. உங்களிடம் நான் அதைச் சொல்லுகிறேன். நீங்கள் யாருக்கும் தெரியப்படுத்த வேண்டாம்” என்று அவன் சொல்ல ஆரம்பித்தான்.

மகான் அகோரமூர்த்தி என்று இப்பொழுது போற்றப்படும் சட்டிச்சாமியார் அப்பொழுது ஊர்பேர் தெரியாதவராய்ப் பிச்சையெடுத்து சுற்றிக்கொண்டிருந்தார். வயிற்றுப்பசி யடங்கியதும் குளத்தங்கரையில் இருக்கும் கோயில் மண்டபத்தில் படுத்துத் தூங்குவார். அவ்வளவுதான் அந்த ஊராருக்குத் தெரிந்தவரை அவர் செய்துகொண்டிருந்த காரியங்கள்.

ஒருநாள் காலை அடைக்கலத்தின் மனைவி அஞ்சலை குளத்தில் குளித்துவிட்டுக்கரையேறி வந்தாள். தனியாக வரும் அவளைப் பார்த்ததும், குளத்தங்கரையில் உட்கார்ந்திருந்த சாமியாரின் மனதில் ஒருவகை கிலுகிலுப்பு உண்டாகியது. நாணல் புதரில் மறைந்திருந்து, அவள் அருகே வரும்பொழுது வெளிவந்து அவள் கையைப் பிடித்து இழுத்தார். அஞ்சலை பயந்து கூச்சல் போட்டாள்.

அப்பொழுது வயலுக்குப் போய்க்கொண்டிருந்த அடைக்கலமும் முனியனும், கூக்குரல் கேட்டு ஓடிவந்தனர். அடைக்கலம் எப்பொழுதும் முன்கோபக்காரன். அதிலும் தன் மனைவியின் கையைப் பிடித்து இழுக்கும் கயவனைக் கண்டால் சும்மாவிடுவான ? சாமியாரை இழுத்துப்போட்டு, செம்மையாக உதைத்துவிட்டான். அடி தாங்காமல், சாமியார் சுருண்டு போய் மரத்தடியில் விழுந்துவிட்டார்.

அஞ்சலை வீட்டுக்குப் போய்விட்டாள். இருவரும் வேலைக்குப் புறப்பட்டார்கள். அப்பொழுது முனியனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. மரத்தடியில் கிடக்கும் சாமியாரைப் புரட்டிப் பார்த்தான். தலையில் அடிபட்டு இரத்தம் கசிந்திருந்தது.

“ நல்லா உதை கொடுத்துவிட்டியே ! தலையில் இரத்தம் வருகிறது, அடைக்கலம் !” என்ருன் முனியன்.

அடைக்கலத்தின் கோபம் இன்னும் தணியவில்லை. “பிச்சைக்கு அலைகிற சாமியார், பெண்டாட்டி கையைப் பிடித்து இழுத்தால் சும்மா விடுவார்களா ? இவனை உயிரோடு வைத்துத் தோலை உரிக்கணும் !” என்று சொன்னன்.

முனியன் சாமியாரை தொட்டுப்பார்த்தான். பேச்சுமூச்சில்லை. அவர் இறந்துவிட்டார் !

“ அட பாவி ! சாமியாரைக் கொன்னுட்டியே !” என்று முனியன் கூவினன்.

அடைக்கலத்தின் கோபம் மாறி, கொலை என்றதும் திகிலடைந்தான்.

" நன்ருய்ப் பார் முனியா! சாமியார் மூச் சடக்கிப் பாசாங்கு செய்வார்!''

அடைக்கலமும் பிணத்தைப் புரட்டிப்பார்த்தான். பயனில்லை, விழுந்தபோது தலை மரத்தில் மோதி, உயிர் போயிருக்கிறது.

இருவருக்கும் என்ன செய்வதென்று புரியவில்லை. நாணல் புதர்ப்பக்கம் பிணத்தை இழுத்துப் போட்டுவைத்தார்கள். எப்படிப் பிணத்தை மறைப்பது என்று அவர்களுக்குப் புரியவில்லை. கடைசியாகப் பிணத்தின் முதுகில் பலமான கல்லைக்கட்டி, புதரில் மறைந்திருந்தபடியே, இருவரும் அதைத் தூக்கித் தண்ணீருக்குள் போட்டுவிட்டார்கள்.

சாமியார் தண்ணீரில் குதிக்கும் சத்தம் எதிர்க்கரையில் பல் துலக்கிக்கொண்டிருந்த நாட்டாண்மைக்காரர் நல்லசாமியின் காதில் விழுந்தது. சாமியார் குளிக்கிருர் என்று நினைத்துக்கொண்டு நாட்டாண்மைக்காரர் பேசாமல் இருந்துவிட்டார். உள்ளே அமிழ்ந்தவர் மேலே எழுந்திருக்காமல் இருக்கவும், அவர் பயந்துபோய், வயலில் வேலை செய்தவர்களைக் கூப்பிட்டார்.

நாட்டாண்மைக்காரர் கூப்பிட்டதும், முதலில் அவர்பக்கம் வந்தவர்கள் முனியனும், அடைக்கலமும்தான். மற்றவர்கள் வருவதற்கு முன்ஞல், அவர்கள் குளத்தில் இறங்கி பிணத்துக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு, தேடிக்கொண்டிருப்பதுபோல பாவனைசெய்து, மற்றவர்களை வேறுபக்கத்திற்கு அனுப்பிவிட்டார்கள். இருவரும் பிணத்தை மெதுவாகத் தள்ளிக்கொண்டுபோய், குளத்தின் ஒரு பக்கத்திலிருந்த மதகின் உள் நுழைத்துவிட்டார்கள். மற்ற ஆட்கள் எவ்வளவு தேடியும் அவர்களுக்குப் பிணம் கிடைக்கவில்லை.

அன்று இரவு முனியனும் அடைக்கலமும் குளத்திற்கு வந்து பிணத்தை வெளியே எடுத்துப்போய், தூரத்தில் புதைத்துவிட்டார்கள். மறுநாள் குளத்தை வடிகட்டிப் பார்த்ததில் சாமியார் பிணம் கிடைக்கவில்லை.

" இவ்வளவுதான் நடந்தது. ஆனுல் 'ஜோதி வந்தது சாமியார் மறைந்துவிட்டார்' என்று புதிது புதிதாக ஒவ்வொருவரும் சொன்னுர்கள். நாங்களும் அதற்கு ஒத்துச் சொன்னேம். அவர் பேரை வைத்து ஊர்பேர் தெரியாதவர்களும் சீடகோடிகள் என்று சொல்லிக்கொண்டு மடங்கட்டினுர்கள். இப்பொழுது இந்தப்பக்கத்தில் ஐந்தாறு கிராமங்கள் அந்த மடத்துக்குச் சொந்தமாகிவிட்டன. ஒன்றுமில்லாதிருந்த சின்னமங்கலம் பெரிதாகிவிட்டது. ஊரிலிருந்தவர்களும் கடை கண்ணி வைத்துப் பிழைக்கிருர்கள். எனக்கு மளிகைக் கடை, அடைக்கலத்திற்கு பெரிய ஹோட்டல்! எல்லாம் மகானின் மகிமை!'' என்று முனியன் கதையை முடித்தான்.

அன்று மாலை ஊரைச் சுற்றிப் பார்த்தேன். திருப்பணி செய்யப்பட்ட திருக்குளம், புதிதான மடாலயம், அங்கு வரும் பக்த கோடிகள், குளத்துத் தண்ணீர்—" புண்ணிய தீர்த்தம்'' அடைக்கப்பட்ட புட்டிகள் வியாபாரமாகும் முறை அவ்வளவையும் நேரில் கண்டேன். ஒரு சந்தைக் கடையில் காணப்படும் பரபரப்பையும் சத்தத்தையும்விட அதிகமான அளவு சந்தடி அங்கிருந்தது. மடாலயத்தில் ஏகபோக உரிமைபெற்று,பளபளப்பு மேனியராய் அமர்ந்திருக்கும் சிவப்புபழுங்களும்,அவர்களது ஆடம்பர வாழ்வும் காண்பதற்கு வேடிக்கையாகவும், யோசித்தால் வேதனை தருவதாகவும் இருந்தன. அவர்களுடைய காலில் பக்தர்கள் விழுந்து கும்பிடுவதும், பாதகாணிக்கை செலுத்தி ஆசீர்வாதம் பெறுவதும்—இதற்கு எவ்வளவு போட்டியும் சண்டை சச்சரவும்! மடாலயத்தில் இருக்கும் சொரூபங்களைப் பார்த்தால், ஒவ்வொருவரும் அகோரமூர்த்தியின் 'அரிய' செயல்களைச் செய்யத் தயாராயிருப்பவர்கள்போலக் காணப்பட்டார்கள்.

அங்கு வந்திருப்பவர் வேறு எதைப்பற்றியும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. " தீர்த்தம், தீர்த்தம்! தீராத வினையெல்லாம் தீர்த்து வைக்கும் தீர்த்தம்!'' என்று கூக்குரலிட்டபடி, கையிலும், தலையிலும் தீர்த்த புட்டிகளை வைத்துக்கொண்டிருந்தனர்.

மறுநாள் நான் அந்தக் கிராமத்தை விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தேன். எனக்கு முன்னும் பின்னும் மக்கள் கூட்டங் கூட்டமாகப்போய்க்கொண்டிருந்தனர். அவர்கள்மிகுந்த திருப்தியுடனும், பயபக்தியுடனும் மகான் அகோரமூர்த்தி செய்த அற்புதங்களைப்பற்றியும், அவர் மாயமாய் மறைந்த திருக்குளத்துத் தண்ணீரின் மகிமையைப் பற்றியும் பேசிக்கொண்டு சென்றனர். நடந்த உண்மைச் சம்பவத்துக்குக் காரணம் எல்லோருக்கும் தெரிந்திருக்கமுடியாது. ஆனுல், காரணம் தெரியாத சம்பவம் அதிசயமாய்—தெய்வத்தன்மை பொருந்திய அற்புதமாகிவிட்டது! ஆனுல் இவற்றைவிட ஆச்சரியமானது, அதிசயம் என்றதும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கும் மக்களுடைய மனப்பான்மை தான்!

குற்றங்களைக் குறைப்பது எப்படி?

[இரா நெடுஞ்செழியன்]

உலகில் மனிதவாழ்வை நன்னிலைப்படுத்துவதற்கு எவ்வளவோ சீர்திருத்தங்கள் கையாளப்பட்டிருக்கின்றன ; எவ்வளவோ கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன ; எவ்வளவோ இயற்கையாற்றல்கள் மனிதனுக்கு ஓய்வு ஒழிவில்லாமல் வேலைசெய்யும் அடிமைகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன ; எவ்வளவோ முன்னேற்றங்கள் உழவுத்துறையில் செய்யப்பட்டிருக்கின்றன; எவ்வளவோ வளர்ச்சிகள் பொறியியல் துறையில் காணப்பட்டிருக்கின்றன; எவ்வளவோவசதிகள் மனித உழைப்புத்துறை ஒவ்வொன்றிலும் செய்யப்பட்டிருக்கின்றன! இவையெல்லாம் வியப்புக்குரிய வகையில் பெரும் அளவுக்குப் பெருகிவந்த போதிலும், உலகில் இருந்துவரும் வறுமையும், குற்றமும் அடியோடு அழிந்தபாடில்லை. எங்கணும் வறுமையும், குற்றமும் தலைவிரிகோலமாகத் தாண்டவமாடிக்கொண்டுதானிருக்கின்றன.

சிறைச்சாலைகளின் எண்ணிக்கையும், அவற்றில் நிரம்பிக்கிடக்கும் குற்றவாளிகளின் எண்ணிக்கையும் பெருகிக்கொண்டேதானிருக்கின்றன ; வழக்குமன்றங்களில் வழக்குகள் ஓய்வு ஒழிவில்லாமல் குவிந்தவண்ணமாகவே இருக்கின்றன : குற்றத்தடுப்புச் சட்டங்கள் இயற்றும் ஆணையாளர்கள் சுறுசுறுப்பாக வேலை பார்த்தவண்ணமாகவே இருக்கின்றனர். இவையெல்லாம் நடைபெற்றுங்கூட குற்றம் போற்றத்தகுந்த அளவுக்குக் குறைந்ததாகத் தெரியவில்லை.

மனிதன் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தன்னைச்சேர்ந்த மக்களைத் திருத்துவதற்கு எவ்வளவோ முறைகளைக் கையாண்டு பார்த்துவருகிறான். குற்றங்களைக் குறைக்க வேண்டி சிறையிடுதல், சித்ரவதை செய்தல், கொடுந்தண்டனை விதித்தல், கொலை செய்தல் போன்ற பல்வேறு முறைகளைக் கையாண்டு பார்த்தும், குற்றத்தைக் குறைக்கும் ஆற்றல் எதுவும் தண்டனையில் பொதிந்திருப்பதாகத் தெரியவில்லை. தண்டனையை எவ்வளவுக் கெவ்வளவு கொடுமையானதாக ஆக்கிய போதிலும், குற்றம் செய்தலைக் குறைப்பது என்பது மட்டும் இயலாத தொன்றாகவே இருந்துவருகிறது.

நாகரிகம் நன்கு வளர்ந்த நாடுகளிலெல்லாம் கூட, மிக அண்மைக்காலம் வரையில், திருட்டுப்போன்ற குற்றங்களுக்கும், திருட்டைவிட சற்றுச் சாதாரணமான குற்றங்களுக்கும் கொலைத் தண்டனையையே குறைந்த அளவு தண்டனையாகக் கொடுத்துவந்தனர். அப்படிப்பட்ட கொடிய தண்டனைகளைக் கொடுத்துவந்தும், திருடர்களின் எண்ணிக்கையும், குற்றவாளிகளின் எண்ணிக்கையும் நாளுக்குநாள் பெருகிவந்தனவேயொழிய, குறைந்து காணப்படவில்லை. நாட்டுக்கும் மக்களுக்கும் அரசுக்கும் துரோகம் இழைக்கும் துரோகிகளைத் தூக்கிலிட்டனர் ; சித்ரவதை செய்தனர் ; குதிரைகளின் கால்களோடு கட்டப்பட்டுச் சின்னாபின்னமாக்கப்பட்டனர். அப்படியிருந்தும் துரோகம் இழைப்போரின் பட்டியல் நீண்டுகொண்டுதான் இருந்தது.

பொதுமக்களுக்கு அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஊட்டவேண்டி கையாளப்பட்டுவந்த கொடிய சட்டங்கள் பல, நாடுதோறும் நாளடைவில் கைவிடப்பட்டும் வந்துள்ளன. அப்படிக்கைவிடப்பட்டதன் காரணமாகக்குற்றங்கள் மேலும் மேலும் வளரச்செய்தனவோ என்று பார்த்தால், அப்படி ஒன்றும் வளர்ந்துவிடவில்லை என்பதுமட்டும் உறுதியாகத் தெரிகிறது. பெரும்பாலான நாடுகள் தூக்கு மரங்களையும், வெட்டுப் பாறைகளையும், மின்சார நாற்காலிகளையும், சிறைக்கூடங்களையும், இருட்டறைகளையும் நம்பி வாழ்கின்றன. ஒரு மனிதன் கொலைக்குற்றம் புரிந்துவிடுவானேயானால், அவன் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டுத், தூக்கிலிடப்பட்டோ, மின்னாற்றலுக்கு இரையாக்கப்பட்டோ அல்லது அவனது உயிர் சிறிதுசிறிதாக அகலும்படித் தோலுரிக்கப்பட்டோ உயிர்ப் போக்கப்படுகிறான். அவனது கொலைத்தண்டனை நிறைவேற்றப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம், அதே மாதிரியான தண்டனையை ஏற்க வேறொருவன் தயாராகக்

காத்துக்கொண்டிருக்கிறான். மனிதர்கள் திருடுகிறார்கள்; திருட்டுக் குற்றத்திற்காக அவர்கள் சிறைக்கூடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள்; அங்கே காட்டு விலங்குகளைப்போல நடத்தப்படுகிறார்கள்; அடிக்கடி சித்ரவதைகளுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். அவர்கள் தண்டனைக் காலம் முடிந்ததும் வெளியேவிடப்படுகிறார்கள். அவர்கள் எங்கிருந்து அழைத்து வரப்பட்டார்களோ, அங்கே அவர்கள் திரும்பிப்போய்ச் சேர்வதற்கான அளவுக்கு மட்டுமே செலவுத் தொகை கொடுத்தனுப்பப்படுகிறார்கள். அவர்கள் வசதிகள் ஏதும் அற்ற நிலையில் திக்கற்றவர்களாக விடப்படுகிறார்கள்; அவர்களுக்கு நண்பர்கள் யாரும் ஏற்படுவதில்லை. அவர்கள் குற்றவாளிகள் என்ற முறையில் பிறரால் சுட்டிக்காட்டப்பட்டும், வெறுத்தொதுக்கப்பட்டும், விரட்டியடிக்கப்பட்டும் வாழ்கிறார்கள். அவர்களைப் பார்ப்போரெல்லாம் ஐயுறுகிறார்கள்; கேலியும் கிண்டலும் செய்கிறார்கள். அவர்களுக்கு எங்கேயேனும் தப்பித்தவறி ஒரு வேலை கிடைத்தால், அவர்கள் ஒருகாலத்தில் குற்றவாளிகளாக இருந்தனர் என்று தெரிந்தவுடன், வேலைக்கு வைத்துக்கொண்டோர், அவர்களை உடனே வேலையைவிட்டு நீக்கிவிடுகிறார்கள். தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்பதைப் புறஉலகுக்குக் காட்டிக்கொள்ள எவ்வளவோ முறைகளிலெல்லாம் பாடுபட்டுப் பார்க்கிறார்கள்; நாணயமாகவும், நேர்மையாகவும், உண்மையாகவும் நடந்துபார்க்கிறார்கள். தாங்கள் பழைய குற்றவாளிகள் அல்ல, அவர்களினின்றும் வேறானவர்கள் என்று தங்களைத் தாங்களே மறைத்துக்கொண்டு, நல்லவர்களாக நடந்து காட்டவும் முற்படுகிறார்கள். எவ்வளவோ முயன்று பார்த்தும் நாணயமாகவும், நேர்மையாகவும் வாழமுடியவில்லை என்று அறிந்தவுடன், மீண்டும் திருட்டு முதலிய குற்றங்களுக்குத் தங்களை ஆளாக்கிக்கொள்கிறார்கள்; மீண்டும் வழக்கு மன்றங்களிலே கொண்டுவந்து நிறுத்தப்படுகிறார்கள்; சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறார்கள்; சிறைச்சாலையின் நெடுஞ்சுவர்களுக்கிடையில் தள்ளப்படுகிறார்கள். சீர்திருத்தம் ஏதும் ஏற்படுவதில்லை. சீர்திருத்தம் செய்வதற்கான வழியும் பிறப்பதில்லை; அவர்களுக்குப் புதிய நண்பர்களும் ஏற்படுவதில்லை; வயிற்றுச் சாப்பாட்டுக்கான வகையும் கிடைப்பதில்லை.

இப்படிப்பட்ட நிலைமை மனித சமுதாயத்துக்கு இழுக்கும், அவமானமும் பயப்பதாகும். மனிதர்கள் தண்டனைக்காகச் சிறைச்சாலைக்கு அனுப்பப்படக்கூடாது. ஏனென்றால், எவரும் குற்றம் செய்யவேண்டும் என்னும் குறிக்கோளோடு முதன் முதலில் குற்றம் செய்யப் புகுவதில்லை; சூழ்நிலைகள் குற்றம்புரியும்படி அவர்களைத் தூண்டிவிடுகின்றன. இதை நாம் நன்கு மனதில் பதியவைத்துக்கொள்ள வேண்டும். இயற்கை முற்றும் முடிந்த முழு நிறைவானப் பண்புடையவர்களையே எப்பொழுதும் உற்பத்தி செய்துகொண்டிருப்பதில்லை. மனித இனத்தில் கணக்கிட்டுப்பார்த்தால் குறைபாட்டுடையவர்களின் எண்ணிக்கையே மிகவாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட அளவு-அமைப்பு-திறன் கொண்ட மூளையை உடைய சிலர், சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில், சில குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள எண்ணும்போது, சில குறிப்பிட்ட உணர்ச்சிகளின் வயப்பட்டுத் திருடர்களாகவும், போக்கிரிகளாகவும், கள்ளக் கையெழுத்திடுவோராகவும், ஏமாற்றுபவர்களாகவும் மாறிவிடுகிறார்கள். மக்களில் பெரும்பாலோர் குற்றவாளிகளாக மாறுவதற்குச் சூழ்நிலைகள் முக்கியமான பெருங்காரணங்களாக அமைந்திருக்கின்றன என்பதை நம்மில் பலரும் உணரவே செய்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சிலபல மாற்றங்கள் ஏற்படுத்துவதன்மூலம், ஒரு மனிதனுடைய போக்கிலே மாற்றம் காணமுடியுமா என்பதும், சீர்திருத்தம் பெற இயலுமா என்பதும் நம் முன் இருக்கும் கேள்விகளாகவும். குற்றவாளி மனித சமுதாயத்திற்குத் தீங்கு இழைப்பவன்தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது; நாமும் மறுக்க முன்வரவில்லை; அதனை முழுக்க முழுக்க ஒப்புக்கொள்ளவே செய்கிறோம். தீங்கு இழைக்கும் ஒரு குற்றவாளியினின்றும், தன்னைக் காப்பாற்றிக்கொள்ள சமுதாயம் முழு உரிமையும் படைத்திருக்கிறது. அதற்காகக் குற்றவாளி சிறைப்படுத்தப்படவேண்டியது அவசியந் தான். குற்றவாளியைச் சீர்ப்படுத்துவது என்பது இயலுவதானவொரு செயல் என்றால், அவனைச் சிறைப்படுத்துவதைவிட, அவனைச் சீர்திருத்தம் செய்ய முற்படுவது நல்லது என்று குறிப்பிடுகிறோம். சிறைச்சாலை ஒரு பள்ளிக்கூடமாக மாறவேண்டும் என்பதும், அங்குக் குற்றவாளிகள் நற்பண்புடையராகக் கற்பிக்கப்படவேண்டும் என்பதுந்தான் நம் விருப்பமாகும். சிறைச்சாலையிலுள்ள குற்றவாளிகள் எல்லாம் சக்திக்கேற்ற அளவு உழைக்கவேண்டும்; அவர்களின் உழைப்புக்கேற்றபடிபோதுமான அளவு நியாயமான ஊதியம் அளிக்கப்படவேண்டும். சிறைச்சாலையின் நிர்வாகம் மிக உயர்ந்த நற்பண்பும், நல்லறிவும், நல்லாற்றலும் படைத்த சான்றோர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். அவர்கள் அறவுள்ளம் படைத்தவர்களாகவும், அன்புள்ளம் படைத்தவர்களாக

வும் இருக்கவேண்டும். மனித இயல்பையும், மனித மனவளத்தையும் அவர்கள் நன்கு அறிந்தவர்களாக இருக்கவேண்டும். ஒரு கைதி எடுத்துக்காட்டாக ஐந்து ஆண்டு காலம் சிறைச்சாலையில் இருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த ஐந்தாண்டு காலத்தில் அவன் நல்லவிதமாக ஒழுக்கப் பண்புகள் கற்பிக்கப்பட்டு, வாழ்க்கையை நல்ல விதமாக நடத்தலாம் என்ற உணர்வையும், சமுதாயத்தின் பகைமையைச் சம்பாதித்துக் கொள்ளாமலேயே நல்ல தொழில் நடத்திப் பிழைக்கலாம் என்ற ஊக்கத்தையும், அதற் கேற்றாற்போல் நல்லதொரு தொழிலறிவை யும், அப்படி வாழ்ந்தால் யாரும் தன்னைத் தண்டிக்கவோ, தன்னை இழித்துக் கூறவோ, அல்லது தன்னைச் சுரண்டவோ முன்வரமாட் டார்கள் என்ற தெளிவையும் அவன் பெற்று வெளியேறுவானேயானால், தான் ஒரு சீரிய மனிதன் என்ற பெருமிதத்தோடு உலாவ வழி யேற்படும். அவன் சிறைச்சாலையில் உழைத் துச் சம்பாதித்த பொருள், வெளியே, அவ னுக்கு, ஓரளவுக்கு, ஏதேனும் ஒரு தொழிலுக் கான மூல இருப்பாக அமையவும் கூடும். சிறைச்சாலையில் பண்பட்டு வெளியேறும் அவன், வெளியே பெயரை மாற்றிவைத்துக் கொள்ள விரும்புவானேயானால், முன்னைய நிகழ்ச்சிகளைக்கொண்டு மக்கள் தன்னை யார் என்று கண்டுகொள்ளக்கூடாது என்று எண் ணுவானேயானால், அவனது பெயரை அவன் மாற்றிவைத்துக்கொள்ள அரசாங்கம் அனும திக்கவேண்டும். அவன் வெளியே நடமாடும் போது, தன்னைப் பிறர் மனிதன் என்று மதிக் கிறார்கள் என்ற உணர்வும், தனக்கு எங்கணும் நீதியும் நேர்மையும் வழங்கப்படுகின்றன என்ற உணர்வும், மனிதனுக்கு மனிதன் பெறவேண் டிய அன்பும் அருளும் தனக்கு எல்லோரிடமும் கிடைக்கின்றன என்ற உணர்வும் அவனுக்கு ஏற்பட்டால், அவன் முழுக்க முழுக்கப் புது மனிதனாகவே காட்சியளிப்பான். சிறைச்சாலை கொடுமைச்சாலையாக ஆக்கப்படாமல் சிறந்த கல்விச்சாலையாக ஆக்கப்பட்டால்தான், கைதி களைப் பொறுத்து மேற்கண்ட மாற்றங்களை எதிர்பார்க்கலாம். சிறைச்சாலையில் சீர்திருத் தப்பட்டு, வெளியே அனுப்பப்படும் மனிதன் உள்ளபடியே மீண்டும் குற்றம் செய்தலை நோக்கமாகக் கொள்ளமாட்டான்; ஏதேனும் நாணயமான ஒரு தொழிலைச் செய்யவேண்டும் என்பதைத்தான் நோக்கமாகக் கொள்வான். அவன் நாளடைவில் ஒரு நற்பண்புவாய்ந்த, மதிப்பிற்குரிய, யாவர்க்கும் பயன்படத்தக்க ஒரு நல்ல குடிமகனாகத் திகழவே செய்வான்.

சிறைச்சாலையைச் சீர்திருத்துவதன் மூலம் நாம் முழுச் சீர்திருத்தத்தைச் சமுதாயத்தில் எதிர்பார்க்க முடியாது என்றாலும், ஓரளவுச் சீர்திருத்தத்தை எதிர்பார்க்கலாம். ஆனால் நாட்டில் எவ்வகையிலும் சீர்திருத்தமுடியாத சில குற்றவாளிகள் இருக்கவே செய்கின்றனர். அவர்கள் திரும்பத் திரும்பக் குற்றங்களைச் செய்துகொண்டே யிருப்பதும், திரும்பத் திரும்ப வழக்கு மன்றங்களில் நிறுத்தப்படுவ தும், திரும்பத் திரும்பத் தண்டனை ஏற்பதும், திரும்பத்திரும்பச் சிறைப்படுவதுமான காட்சி களை அன்றாடம் பார்த்துக்கொண்டேயிருக் கிறோம். கொலை, கொள்ளை, தீயிடுதல் போன்ற பயங்கரக் குற்றங்களுக்குத் தங்களை எப்பொழு தும் ஒப்படைத்துக்கொண்டே யிருப்பவர்கள் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு நாடுகடத்தப் படவேண்டும். எங்கேனும் திக்கற்ற தீவுகளில் அவர்கள் விடப்படவேண்டும். ஆண் குற்ற வாளிகள் ஒரு தீவிலும் பெண் குற்றவாளிகள் வேறோர் தீவிலும் விடப்படவேண்டும். அவர் கள் எல்லோரும் அவர்கள் தலைமுறையோடே அழிந்துபடுபவர்களாக இருக்கவேண்டும். அவ் விருவகையினரும் கூடிக்கலக்கும் வகையில் ஒரே தீவில் விடப்பட்டால், அத்தகையோர் பெற்றெடுக்கும் பிள்ளைகளும் குற்றப்பரம்பரை யினராகவே காட்சியளிப்பர். அத்தகைய குற் றப்பரம்பரை அடியோடு அழியவேண்டுமா யின், புதிதாகத் தோன்றாமலிருக்கவேண்டு மாயின் ஆண் குற்றவாளிகளும் பெண் குற்ற வாளிகளும் தனித்தனித் தீவிலே விடப்பட வேண்டும். அவர்கள் வாழ்நாள் முழுவதும் அத்தீவுகளில் உழைத்து வாழ்வதற்கான வகையில் வசதிகளும் செய்யப்படவேண்டும்; அவர்கள் கடுமையான கண்காணிப்பின்கீழ் இருக்கவேண்டும்.

மனிதனின் உள்ளத்திலோ அல்லது உட லிலோ, ஏற்படும் எந்த நோய்களாயினுஞ் சரி, அல்லது எந்தக் குறைபாடுகளாயினுஞ் சரி, அவைகளை நீடித்து நிலைக்கவிடாமல், அவை அடியோடு அழிந்துபோகும்படி செயலாற்றல் கள் செய்யப்படவேண்டும். அறிவுடையவரும் அறிவற்றவரும், திறமையுடையவரும் திறமை யற்றவரும், வலிவுடையவரும் வலிவற்றவரும் பெற்றெடுக்கும் குழந்தைகள், சீரிய மக்களின் பாதுகாப்பில் தூய சூழ்நிலைகளுக்கிடையில் வளர்க்கப்பட்டால் மனித சமுதாயம் நல்ல முறையில் திருந்த வழி ஏற்படும். மனித வாழ் வின் துவக்கத்திலேயே குற்றம்புரிதல் என் னும் அவமானக் கறை படியாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

முன்பக்கம் நீளமான யோக் ப்ராக்

இந்த ப்ராக் முன்பக்கம் நீளமான யோக் உடைய, முழுநீள கையுடன் அமைந்ததாகும். முன்பக்க, திறப்புக்கு (ஓப்பன்) பட்டன் 9-ம் அதற்கு மேற்பட்டும் அமைக்கலாம். முன்பக்க திறப்புக்கு 3 அங்குலம் உள் துணி (பால்சன்) திருப்பித் தைக்கவும். இடுப்புப் பட்டி (பேண்ட்) தனியாக தேவையான அளவில் அமைத்துக் கொள்க. இதற்குக் கீழ் பாவாடையை 4 துண்டுகளாகவும், (ஸ்கர்ட்) வெட்டி தைக்கலாம்.

அளவுகள்

இடுப்புவரை முதுகு நீளம்	10	அங்.
முழு நீளம்	28	,,
மார்புச் சுற்று அளவு	24	,,
பாதித்தோள் அளவு	5	,,
முன்னங்கை லூஸ்	$3\frac{1}{2}$	,,
கை நீளம்	15	,,

புதிய வெளியீடு!

தையற்கலை

ஆசிரியர் : K. P. சுந்தரம் G. C. T.

பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் உரிய பல வித உடைகளை வெட்டித் தைக்கும் முறை இந்நூலில் 50-க்கு மேற்பட்ட விளக்கப் படங்களுடன் வரையப்பட்டுள்ளது. ஆசிரியர் துணையின்றித் தாமே வெட்டித் தைப்பதற்குச் சிறந்த நூலாகும். எவரும் எளிதில் கற்றுக் கொள்ளலாம். தமிழில் முதன் முதல் வெளிவரும் தையற்கலைப் புத்தகமாகும்.

பெண்ணின் பெருமைக்குச் சிறந்த கலைத் துறை ஏடாகும். அரசாங்கத் தேர்வில் வெற்றி பெற விரும்பும் பெண்மணிகளுக்குப் பெரிதும் உதவி செய்யும். விலை ரூ. 2 0 0.

கிடைக்குமிடம் :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.



1-ல் இருந்து 0 வரை $8\frac{1}{2}$ அங். (இடுப்புவரை முதுகு நீளம் $+\frac{1}{2}$ அங். $=10\frac{1}{2}$. அங்குலத்தில் யோக் அகலம் 2 அங். குறைவு.)

2-ல் இருந்து 0 வரை $5\frac{1}{2}$ அங். ($\frac{1}{4}$ மார்பளவில் $+\frac{1}{2}$ அங். குறைவு)

3-ல் இருந்து 0 வரை 2 அங்.

4-ல் இருந்து 0 வரை $\frac{3}{4}$ அங்.

5-ல் இருந்து 0 வரை $5\frac{1}{4}$ அங். (பாதித்தோள் $+\frac{1}{4}$ அங்.)

6-ல் இருந்து 5 வரை $\frac{1}{2}$,,

7-ல் இருந்து 5 வரை நேர்க் கோடு இணைக்க.

8-ல் இருந்து 2 வரை $7\frac{1}{4}$ அங். ($\frac{1}{4}$ மார்பளவு $+1\frac{1}{4}$ அங்.)

9-ல் இருந்து 1 வரை $7\frac{1}{4}$,,

10-ல் இருந்து 9 வரை $\frac{3}{4}$,,

11-ல் இருந்து 12 வரை $29\frac{1}{2}$,, (முழு நீளம் $+1\frac{1}{2}$ அங்.)

12-ல் இருந்து A வரை 4 ,,

13-ல் இருந்து 11 வரை $8\frac{1}{2}$,, (இடுப்புவரை முதுகு நீளம் $+\frac{1}{2}$ அங். $=10\frac{1}{2}$ அங்குலத்தில் யோக் அகலம் 2 அங். குறைவு.)

(தொடரும்)

Regd. No. M 6296

நாடெங்கும் வெற்றிப் புன்னகை பூத்திடும்
கண்கொள்ளாக் காட்சி !

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.